எந்தப் பிரச்சினையான சூழலிலும் மிக ஒழுங்கான வகுப்புகளுக்கு

யாழ் நகரில்

New Master Institute

B.M.C. Lane, Jaffna.


# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி


A/L 87 DAY CLASS

ஆரம்பம் 10-09-1986 புதன்கிழமை காலை 8.30 மணி

(சகல வசதிகளுடன் அனுபவமுள்ள ஆசிரியர் குழுவினரால்) விபரங்கட்கு

New Master Institute

B.M.C. Lane, Jaffna



மலர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஆவணி மீ 7 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்ஹஜ் பிறை 17 (23-08-1986) SANJEAVY – REGENERATIVE TAMIL WEEKLY இதழ்: 31



கருத்துக் கலசம்


## தமிழே, தமிழே!

தமிழர்கள் உலகின் எல்லாப் பகுதிகளிலும் வாழ்கிறார்கள். ஐந்து கண்டங்களைச் சேர்ந்த பல நாடுகளிலும் வாழ்கிறார்கள். பல நாடுகளில் அந்தந்த நாட்டுப் பிரஜைகளாக இருக்கிறார்கள். சில நாடுகளில் வேலை வாய்ப்புக் கருதித் தற்காலிகமாக வசிக்கிறார்கள்.

இது பெருமைப்படக்கூடிய விடயம். 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிக்கு ஏற்ப வேற்று நாடுகளில் தொழில் புரியச் செல்லும் தமிழர்களின் நல்லகாலம் அங்கு அவர்கள் வசதியுடன் வாழும் வாய்ப்பு அதிகம் இருப்பதும் மகிழ்ச்சி தருவதாகும்.

ஆனால் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களைப் பொறுத்தமட்டில் மிகக் கவலைக்குரிய விவகாரம் ஒன்று உண்டு.

அண்மையில் நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழா ஒன்றில் அந்தத் துன்பம் தரும் செய்தி வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதியும், சிறந்த தமிழ் எழுத்தாளரும், நல்ல தமிழ் அபிமானியுமான 'நந்தி' எனப்படும் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் இச்செய்தியைத் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களில் 50 வயதுக்கு மேற்பட்டோர் தமிழ் எழுத வாசிக்க, பேசவல்லவர்கள். இளைஞர்கள் பேசவதோடு நின்று விடுகிறார்கள்; எழுதுவதில்லை, குழந்தைகளுக்கு எழுதவும் தெரியாது, பேசவும் தெரியாது.

இது பெருங் கவலைக்குரியது மட்டுமல்ல ஆபத்தானதும் கூட. வெளிநாடுகளில் நிரந்தரமாக வசிக்கும் தமிழர்கள் அந்தந்த நாடுகளின் தேசிய மொழிகளைப் படிக்க வேண்டிய பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. தற்காலிகமாக வசிப்போர் தொடர்பு மொழியான ஆங்கிலத்தைப் பேசவும், எழுதவும் வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

அதனால் அவர்களின் தமிழ் மறந்து விடுகிறார்கள். பாதிக்கப்படுபவர்கள் இளைஞர்களும் குழந்தைகளும்தான். பெயர்கள் மட்டும் தமிழ்ப் பெயர்களாக இருக்க அவர்கள் பேசவும், எழுதவும் வேறுமொழி வாசமாக இருக்கின்றனர்.

மொரிஷியஸ் தீவில் இப்படி ஒரு நிலை நிலவுவதாகச் சில ஆண்டுகளுக்கு முன் செய்திகள் வந்தன. தமிழ் நூல்கள் அங்கு கிடைப்பதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குறைபாடு களைத் தீர்க்கத் தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள


(8 ம் பக்கம் பார்க்க)


யாழ். நகரில் கண்ணீர்க் கதை

# ராணுவஷெல் விழுந்து மாப்பிள்ளை மரணம்!

## திருமண வீடு அமங்கலமாகியது; உறவினர் ஒருவரும் பலியாகினர்;

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 23

யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து இராணுவத்தினரால் ஏவப்பட்ட "ஷெல்" குண்டு விழுந்து மாப்பிள்ளை மரணமான துயரச் சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றது.

கோவிலில் பெண்ணுக்குத் தாலி கட்டித் திருமணம் செய்து மாப்பிள்ளை வீடு வந்து சேர்ந்த சமயம் 'ஷெல்' விழுந்தது. அந்த இடத்திலேயே அவர் துடிதுடித்து மரணமானர்.

திருமண வீடு இராணுவத்தினரின் ஷெல்லால் சில நிமிட நேரத்தில் அமங்கலமானது. மாப்பிள்ளையின் உறவினர் ஒருவரும் அவ்விடத்திலே மரணமானர்.

திருமணவீடு ஒரு சில நிமிட நேரத்தில் மரண வீடாகிய கண்ணீர்க் கதை நேற்று யாழ்நகரில் இடம்பெற்றது.

கோட்டை முகாமிலிருந்து ஷெல் வடிவில் வந்த காலன் புதுமணத் தம்பதிகளை ஒரு சில விநாடிகளில் பிரித்துச் சென்றான்.

தான் காதலித்த மங்கையைக் கைப்பிடித்து அழைத்து வந்த புதுமணன் தாலி கட்டி சில மணி நேரத்திலுள் திருமணக் கோலத்திலேயே காலனை அணைத்துக் கொண்ட பரிதாப சம்பவம் இது.

நேற்று வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியில் நடந்த இந்தச் சம்பவம் யாழ் நகர் எங்கும் சோகத்துடன் பேசப்பட்டது.

திருமணக் கோலத்திலேயே மரணமான மாப்பிள்ளை இரத்தினம் உதயசூரியன், வயது 29.

இவர் வேலணையைச்


(8 ஆம் பக்கம் பார்க்க)




மணக்கோலத்தில் மரணமான புதுமண மாப்பிள்ளையின் படத்தை மேலே காணலாம். பட்டு வேட்டி, சால்வையுடன் இரத்த வெள்ளத்தில் அவர் கிடக்கும் காட்சி.

ஷெல் குண்டு விழுந்த வீட்டின்பகுதி. இந்தக் கதிரை ஒன்றில்தான் மணமகன் அமர்ந்திருந்தார் கதிரைக்கு அருகே இரத்த வெள்ளமும், மாப்பிள்ளை அணிந்திருந்த தலைப்பாகையும், திருமண மாலையும் காணப்படுகின்றன.

# பாதுகாப்புப் படையினரை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்குமாறு இந்தியா வலியுறுத்தியது

கொழும்பு, ஆக 23

ஆயுதபடையினரைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும்படி இந்தியா இலங்கையை வற்புறுத்திக் கேட்டுள்ளது

இந்தியாவின் இவ்வற்புறுத்தல், நேற்று மாலை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு ஜே என். டிக்ஸிற் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து இந்தியாவின் நிலையைத் தெரிவித்தார்

இப்படி கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்கள் மிகச் சிக்கலான நிலையில் இடம் பெற்று வருகின்றன. பேச்சுக்கள் நடத்தப்படும் சூழ்நிலையை குழப்பாதிருக்கும் விதத்தில் இரு தரப்பாரும் கட்டுப்பாட்டுடன் நடக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது

மேற்கண்டவாறு இந்தியத் தூதர் டிக்ஸிற் ஜனாதிபதியிடம் தெரிவித்தார் என அறிய வந்தது

ஜனாதிபதியைச் சந்திக்கும் முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம், திரு இரா சம்பந்தன் ஆகியோருடன் இந்தியத் தூதர் திரு டிக்ஸிற் பேச்சுக்கள் நடத்தினர்

ஜனாதிபதி இந்தியத் தூதர் சந்திப்பின் பின்னரே தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் குழு ஜனாதிபதியைச் சந்தித்து மாலைப் பேச்சுக்களை ஆரம்பித்தது

(அ-எ)

### சுபநேரம்

23—08—1986

சனிக்கிழமை

சுபநேரம்:

3.05 முதல் 4.35 வரை

ராகுகாலம்:

9.05 முதல் 10.35 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

சஷ்டி ஹர கணபதி விரதம்

### இன்று நல்லூரில்

மகோற்சவம்

14 ஆம் திருவிழா

காலை 10 மணிக்கு வெள்ளி மயில், வெள்ளி அன்னம். (உள்வீதி)

மாலை 5 மணிக்கு ஆட்டுக்கடா, கிளி, யானை. (வெளிவீதி)

மாலை 3.00 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நிகழ்ந்து வரும் மாதாந்தர் சொற்பொழிவில் 'கல்விக் தாமரை மலருமா? என்னும் பொருள்பற்றி ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

மாலை 6.30 மணிக்கு ஆலய மேற்கு வீதியில் உள்ள பிள்ளையார் கோயில் மண்டபத்தில் திரு. வை. நித்தியானந்த சர்மா அவர்களால் கந்த புராணத் தொடர் பிரசங்கம் நடைபெறும்.

## கடற்படையினர் முயற்சி முறியடிப்பு

பருத்தித்துறை, ஆக 23

பருத்தித்துறை கிழக்குக் கடற்கரையோரமாகக் கடற்படையினர் தரை இறங்க எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 11.30 மணியளவில் சுற்றோவளம் கடற்கரைப் பகுதிக்குக் கடற்படையினர் சிறைப் படகு மூலம் தரை இறங்க முயற்சித்தனர்

இதனையறிந்த போராளிகள் நவீன ரக மோட்டார் தாக்குதல்களை நடத்தியதும் கடற்படையினர் பதிலுக்குத் தாக்குதல்களை நடத்திவிட்டு ஆழ்கடலுக்கு விரைந்தனர் எனத் தெரிய வருகிறது.

(உ-118)

## சிப்பாய்கள் பவனி; பயணிகள் ரயிலைத் தவறவிட்டு அவதி

யாழ்ப்பாணம், ஆக 23

சிப்பாய்களின் நடைபவனி காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு ரயிலைப் பிடிப்பதற்காக வவுனியாவுக்கு பஸ்களில் சென்ற 300க்கும் அதிகமான பயணிகள் ரயிலைத் தவறவிட்டனர்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது

நேற்றுக் காலை சுவச வாகனங்கள் சகிதம் நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் வவுனியாவில் இருந்து மாங்குளம் நோக்கி நடைபவனியாகச் சென்றனர்.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த பஸ்கள், லொறிகள் மற்றும் வாகனங்கள் மாங்குளத்துடன் நிறுத்தப்பட்டுவிட்டன.

நடைபவனி முடிந்த பின்னரே, மாங்குளத்தில் இருந்து வவுனியாவுக்கு வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டன.

ரயில் புறப்பட்டுவிட்டதால் யாழ்ப்பாணம் இருந்து வந்த பயணிகள் நிர்க்கதியாகினர்.

அவர்கள் தங்குவதற்கு உரிய ஒழுங்குகளை நேற்று வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுச் செயலாளர் டாக்டர் எஸ் வி பரராஜசிங்கம் செய்து கொடுத்தார்

(உ. எ)

## வவுனியாவில் இரண்டுபேர் பலி!

### 6 பேர் பற்றி தகவல் இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 23

வவுனியா, புளியங்குளம் அம்மன்கோவில் திருவிழா சம்பந்தமாக ஒலிபெருக்கியில் அறிவிக்கச் சென்ற ஆறு தமிழரில் இரண்டு பேர் ஆயுதப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தனர். கூடச் சென்ற நான்குபேரின் நிலை பற்றி எதுவித தகவலும் இல்லை.

இச்சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் புளியங்குளம் பகுதியில் இடம்பெற்றது

டிராக்டர் ஒன்றில் ஒலிபெருக்கி அறிவிப்புச் செய்துகொண்டிருந்த இவர்களை நடைபவனியில் சென்ற சிருடையினர் கண்ட சமயத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது என்று தெரிகின்றது

உயிரிழந்த இரண்டுபேரின் சடலங்களும் புளியங்குளம் கொண்டுவரப்பட்டன (உ. எ)

### தமிழ் இளைஞர்கள் ஏழுபேர் கைது

கல்முனை ஆக-23

அக்கரைப்பற்று ஆலையடி வேம்புப் பகுதியில் ஆயுதப்படையினர் நேற்று முன்தினம் நடத்திய தேடுதலில் 7 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்

(உ-எ-84)

## கல்முனைக் கலவர சேத விவரங்கள்

மட்டக்களப்பு, ஆக 23

கல்முனைக் கலவரத்தில் இடம்பெற்ற உயிர்ச் சேதம், சொத்துக்கள் சேதம் பற்றிய புள்ளி விபரங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன

சுமார் 400 வீடுகள், 100 மீன்பிடி வள்ளங்கள், 50 கடைகள், 6 அரிசி ஆலைகள், ஒரு இந்து ஆலயம், ஒரு மதரஸா ஆகியன சேதமடைந்தன.

12 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 4 பேர் முஸ்லிம்கள், 8 பேர் தமிழர்கள்.

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 7 பேர் பற்றி தகவல் தெரியவில்லை

தற்சமயம் 3 முகாம்களில் 310 தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர்

(உ. எ. 21)

### விவசாயிகள் இருவர் பலி

மட்டக்களப்பு ஆக. 23

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் புலிபாய்ந்தகல் பகுதியில் ஆயுதப்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த இரண்டு தமிழ் விவசாயிகள் உயிரிழந்தனர்.

மாரிமுத்து யவிக்குமாரணம், வேலாயுதம் தட்சணமூர்த்தி ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

இராணுவ முகாமைச் சேர்ந்த படையினர், புலிபாய்ந்தகல் பகுதியில் புதர்கள் இடையே போராளிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கப் பதுங்கி இருந்தனர்

இதுபற்றித் தகவல் கிடைத்த சுற்றுச் சூழ்ந்த போராளிப் படையினர் மீது தாக்குதல் நடத்தியதில் 2 சிப்பாய்கள் காயமடைந்தனர்.

(உ-எ-2)

## ஒரு மாதத்திற்கு யுத்த நிறுத்தம்?

புதுடில்லி ஆக. 22

ஒருமாத கால சாதாரண சண்டை நிறுத்தத்துக்கு தமிழ்ப் போராளிக் குழுக்கள் ஒத்துக்கொண்டிருப்பதாக புதுடில்லியில் இருந்து வெளியாகும் 'டைம்ஸ் ஒப் இந்தியா' இன்று (வெள்ளிக்கிழமை) செய்தி வெளியிட்டது

சென்னையில் வியாழக்கிழமை காலை போராளிக் குழுக்களின் தலைவர்கள் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் முன்னிலையில் இதற்கான சம்மதத்தை மத்திய அமைச்சர்கள் குழுவிடம் தெரிவித்தனர் என்றும் அச்செய்தி கூறியது.

இச்சந்திப்பு முதலமைச்சரின் இல்லத்தில் இடம் பெற்றது

தமிழ்ப் போராளி அமைப்புக்களை ஆத்திரமூட்டும் விதத்தில் நடக்காமல் அரச படைகளைக் கட்டுப்பாட்டினுள் வைக்கும்படி இலங்கைக்குக் கூறவேண்டும் என்றும் போராளித் தலைவர்கள் மத்திய அமைச்சர்களைக் கேட்டுக்கொண்டதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டிருந்தது (உ-எ)

### விடுவிப்பு

கல்முனை, ஆக 23

இம் மாதம் 18 ஆம் திகதி கல்முனைப் பகுதியில் கைது செய்யப்பட்ட 13 தமிழ் விவசாயிகள் சென்றல் காம்ப் ஆயுதப் படையினர் நேற்று விடுவித்தனர். (உ. எ 84)


புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி 1986



## பரிசு பெறுவோர் விவரம்

**ஆரம்ப பிரிவு**

முதற் பரிசு பெறுபவர்:
செல்வி வெலீசியா நிராஞ்சனி ஞானனந்தராசா,
சண்டிக்குளி மகளிர் கல்லூரி

இரண்டாம் பரிசு பெறுபவர்:
செல்வி க. தேவராணி,
இளையதம்பி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

மூன்றும் பரிசு பெறுபவர்:
செல்வன். தி. குமணன்,
அருணோதயாக்கல்லூரி, அளவெட்டி

**இடைநிலைப் பிரிவு**

முதற் பரிசு பெறுபவர்:
செல்வி. ஜெ சுபாஷினி,
மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை

இரண்டாம் பரிசு பெறுபவர்:
செல்வி ஜீ. சிவப்பிரியா,
மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை

மூன்றும் பரிசு பெறுபவர்:
செல்வன் ச வரதராஜன்,
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
உடுப்பிட்டி.

விசேட பரிசு பெறுபவர்:
செல்வன். ஆ பரமேஸ்வரன்,
யாழ். இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

**உயர்தர பிரிவு**

முதற் பரிசு பெறுபவர்:
செல்வி. சி. நிறைஞ்சனா,
மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை,
பருத்தித்துறை.

இரண்டாம் பரிசு பெறுபவர்:
செல்வி. சாந்தசௌரி நடேசன்,
வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்,
வயாவிளான்.

மூன்றும் பரிசு பெறுபவர்:
செல்வன். வீ. எம். செந்தில்வேல்,
யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

★ ★ ★

இக்கட்டுரைப் போட்டியின் நடுவர் குழுவில் அங்கம் வகித்த அறிஞர் குழாம்:

* கவிஞர். இ முருகையன்,
உதவிப்பதிவாளர்,
யாழ் பல்கலைக்கழகம்.
* பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம்,
இளைப்பாறிய ஆசிரியை,
நீர்வேலி.
* கலாநிதி சபா ஜெயராசா,
சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வித்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.
* திருமதி ஜீ. பரராசசிங்கம்,
விரிவுரையாளர், கல்வித்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.
* திருமதி சரோஜினி கணேந்திரன்,
சிரேஷ்ட உதவித்திட்டமிடல் பணிப்பாளர்,
செயலகம்,
யாழ்ப்பாணம்.
* நவாலியூர் திரு நா. சச்சிதானந்தன்,
மொழி பெயர்ப்புப்பிரிவு,
செயலகம்,
யாழ்ப்பாணம்
* திரு ச. ஜெயச்சந்திரன்,
ஓய்வு பெற்ற நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர்,
யாழ்ப்பாணம்.

# ராகிங்: வேதனையும், சோதனையும் எதிர்ப்பும், ஆதரவும்

**செல்வி: எஸ். ஜே. பி. ரட்ணதுரை**

புக்ககம் புகும் புதுமணப் பெண்போல் புத்தகம் சுமந்தபடி, எதிர்காலம் பற்றிய ஓர் இன்பக் கிளர்ச்சியுடன், விழிகளில் மிரட்சியுடன் பல்கலைக்கழக வளவினுள் வலதுகாலை எடுத்து வைக்கிறாள் அவள்.

'வாடி என் கப்பக் கிழங்கே' பழைய மாணவர்களின் வரவேற்பு பாடல் மூலம் பலமாக இருந்தது;— பயமாக இருந்தது நிமிர்ந்து பார்த்தாள் நின்றவர்கள் பழைய மாணவர்கள். அவர்கள் நடுவே நால்வர் புதிய மாணவர்கள் போலும். அவர்கள் உருவ நிலையே அதை உணர்த்தியது.

புரியாணிக்கு உரித்த 'புரொயிலர் கோழிகள்' போல் தலை, தாடி, மீசை மழுங்க வழிக்கப்பட்டு கண்களில் பீதியுடன் பேதி குடித்தவர்கள்போல் நின்றார்கள் 'மிஸ் உங்கடை பேரென்ன?' ஒரு தாடிக்காரர் கேட்கிறார்.

—பதில்வர தயங்குகிறது

பதில் சொல்ல மனம் தபால் அட்டைபோல் திறந்தே இருந்தாலும்; உதடுகள் ஏனோ தபால் கவர்போல் ஒட்டிக் கொள்கின்றன.

'எடியே உன்னைத்தான் பேர் என்ன?'

'மீனா'...

'ஏன் உனக்கு அப்பரில்லையே? அல்லது அப்பன் பேர் தெரியாதனியே? அவற்றை பேரை, 'இனிசலை' ஏன் முதலில் சொல்லேலை...'

'எங்கை இருக்கிறது'

'மட்டக்களப்பு',

தலைமயிர் வலுநீளமாயிருக்கு உண்மையான மயிரோ அல்லது பொய்முடியோ? கேட்ட தாடிக்காரர் தன் சந்தேகத்தை தீர்க்குமுகமாக இழுத்துப் பார்க்கிறார். தொடர்ந்து அந்த சிங்கங்களின் வார்த்தைகள் அசிங்கமாக போகிறது

அவர்களின் பகிடிவதை (ராகிங்) அவளுக்கு சித்திரவதையாகிறது.

அவள் கண்களில் கண்ணீர் கோலமிடுகிறது; அது கன்னம் வழியே பாலமிடுகிறது, கள்ளமில்லா அவள் மனதோ ஓலமிடுகிறது.

'இன்றையோடை எம் பஸ்க்கு முழுக்குபோட வேணும் அதுக்கு முந்தி துணைவேந்தரிட்டை சொல்லி இவங்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணும்...' மனதுள் கறுவிக்கொள்கிறாள்

இது நடந்து 3ம்நாள் மீனா தனிமையில் அழுது கொண்டிருக்கிறாள். அதே தாடிக்காரர் கிட்ட நெருங்குகிறார். குளிருக்கு குறுகிய கோழிக்குஞ்சாய் பயத்தில் ஒடுங்கிக்கொள்கிறாள்.

'ஏன் அழுகிறாய் என்ன நடந்தது? கையிலை என்ன கடிதம்'

'அப்பாவுக்கு சுகமில்லை கடுமையாம்...'

ஓ! சொறி மிஸ்..., சொன்னவன் உரிமையோடு கடிதத்தை பறித்து படித்து உடனே அழைத்துச் சென்று, பேராசிரியரிடம் கூறி, வார்டனிடம் அனுமதி பெற்று தன் செலவில் ரயிலுக்கு ரிக்கெற் வேண்டி, அவளுக்கு இருக்க இடம் பிடித்து கொடுத்து அனுப்பினான்.

இப்படி தன் அனுபவத்தை யாழ் பல்கலைக் கழக இறுதி ஆண்டில்

> யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் "ராகிங்" என்ற கிண்டல் கலாட்டா விவகாரம் பெரும் பிரச்சினையைக் கிளப்பியது.
> எல்லா இடங்களிலும், பலர் வாயிலும் அது பற்றியே பேசப்பட்டது. பெரும் சர்ச்சைக்குரிய விடயமாகவும் மாறியது
> மக்களில் பல தரப்பட்டவர்களினதும் கருத்துகளை இங்கு தொகுத்துத் தருகிறோம்
> சம்பந்தப்பட்டவர்களின் கருத்து அவரவர்களது சொந்தக் கருத்தாகும்.
> —ஆசிரியர்

பயிலும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் எடுத்துக் கூறினார்.

அண்மையில் நடைபெற்ற "ராகிங்" சம்பந்தமான சர்ச்சை பற்றிய பலரினதும் அபிப்

## மக்களின் மனக் கோலங்கள்

பிராயங்களை அறிய முற்பட்டபோதே மேற்படி கதை எனக்கு கூறப்பட்டது

இதிலிருந்து இருமன இளைஞன் ஒருவனை இனம் காணமுடிந்தது.

**மாணவர்கள்**

பொதுவாக ராகிங் பற்றி பல்கலைக் கழக மாணவர்கள் கருத்து கூறுகையில் ராகிங் அவசியம் தேவை. ஆனால் அது பகிடிவதையாக அமைய வேண்டும். சித்திரவதையாக மாறக்கூடாது என்கிறார்கள்.

அடக்குமுறை போர்வையில், பழிவாங்கும் நடவடிக்கையாக, பாலியல் இச்சைகளை தீர்க்குமுகமாக ராகிங் நடைபெறுகின்றது என்பதை வன்மையாக மறுத்தார் கலைப்பீட இரண்டாம் ஆண்டு மாணவர் ஒருவர். இவ்விதமாக தங்களை இழிவுபடுத்துவதை தாம் கண்டிப்பதாகவும் தாங்கள் அவ்விதமான மனநோயாளிகள் அல்லர் என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கு ஆதாரமாகச் சென்ற வருடம் நடைபெற்ற ஒரு சம்பவத்தையும் சான்றாகக் கூறினார்.

சென்ற வருடம் ஒரு மனநோயாளி மாணவன் ஒரு புதிய மாணவியிடம் தகாத முறையில் நடந்து கொண்டார் சகமாணவர்களின் போராட்டத்தால் அம்மாணவனை நிர்வாகம் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கியது என்றார்

மாணவர்கள் சகலரும் ஒரு விடயத்தையிட்டு கவலையடைந்துள்ளதை காணக்கூடியதாக இருந்தது. அது சம்பந்தமாக மாணவர் நடவடிக்கைக் குழு அங்கத்தவர் ஒருவர் கூறியதாவது:

'எங்கள் போராட்டம் ராகிங் தேவை என்பதல்ல. நாங்கள் ராகிங்கை எதிர்க்கிறோம். எங்கள் போராட்டம், எமது ஜனநாயக உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான நிர்வாகத்துடனான போராட்டமே. வெளியார் தலையீடுகளையே நாம் எதிர்க்கின்றோம்' என்கிறார்.

**பேராசிரியர்**

பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட பேராசிரியர் ஒருவர் இதுபற்றிக் கருத்துக் கூறுகையில் முன்னர் வெளியில் மாணவர் பிரச்சினைப்பட்டால் பொலிஸார் தலையிடுவர். சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ள இந்நாட்களில் பொலிஸாருக்குப் பதிலாக யார் பொறுப்பை கைபேற்பது என்பது சந்தேகத்துக்கு இடமான தொன்றல்ல என்றார்.

மேலும் ராகிங் என்பது பொதுவான ஒரு ஒழுக்கப் பிரச்சினை. அதற்கு ஒரு வரையறை இல்லை. ஆசிரியர்கள்கூட மாணவர்களைக் கிண்டல் செய்வது, தண்டனை கொடுப்பது மூலம் ராகிங் செய்கிறார்கள் என்றார்.

**தலைமை ஆசிரியர்**

முதலாண்டு மாணவர் ஒருவரின் தந்தையான பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் ஒருவர் ராகிங் பற்றிக் கருத்துக் கூறுகையில்;

1930 ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஒன்றில் சாப்பாடு, குளியல், உடை என்பவற்றில் தீண்டாமை அனுசரிக்கப்பட்டது. அங்கே இடம்பெற்ற ராகிங் சம்பவங்களைத் தொடர்ந்தே தீண்டாமை அங்கே ஒழிக்கப்பட்டது.

எனவே ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும், கலாசார ஒற்றுமை பேணவும் ராகிங் அவசியம் என்றார்.

**விரிவுரையாளர்**

இவ்விடயம் பற்றி யாழ் வளாக சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்த போது:

ஒரே மண், ஒரே இனம், ஒரே கலாசாரம், ஒரே சமூகப் பின்னணி ஒரே சூழலில் இருந்து வரும் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ராகிங் அவசியமற்றதாகிறது

ராகிங் மூலமே தம்மைச் சினேகிதப்படுத்திக் கொள்கிறார்கள் என்று கூறுவது வெறும் போலியானது அப்படியென்றால் ஆண் ஆணுக்கும் பெண் பெண்ணுக்கும் மட்டும் ராகிங் செய்யலாமே என்றார்.

**புதிய மாணவர்**

மாணவர்களின் பகிஷ்கார போராட்டத்தைத் தொடர்ந்து புதுமுக மாணவர்கள் இம்முறை ராகிங்கில் இருந்து தப்பி விட்டனர் அவர்களிடம் அபிப்பிராயங்கள் கேட்டபோது;

தாம் பயந்து வந்தபடி ராகிங் நடக்காவிட்டாலும் தாம் ஏதோ ஒருவகையில் ஏமாற்றப் பட்டுவிட்டோம் என்றும் அடுத்த மாணவர்களிலிருந்து தாம் அந்நியப்பட்டுப்போன ஒரு தன்மையும் உணரக்கூடியதாக இருப்பதாகவும் கூறினர்.

சென்றவருடம் நடைபெற்ற ராகிங்கை ரசித்து, அதில் லயித்து அதற்காக வளாகம் வர வேண்டும் என்று தான் தீவிரமாகப் படித்ததாக மாணவர் ஒருவர் கூறினார்.

பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறிய ஒரு பட்டதாரி மாணவனை இதுபற்றி வினவிய போது;

பல்கலைக்கழக மாணவர்கள் அகதிகளுக்காக லட்சக்கணக்கான ரூபாவைச் சேர்த்து உதவினார்கள். இனி நெருக்கடியேற்ற ராசிகளுக்கு 35 கிணறுகளும், நாவற்குழியில் 40 வீடுகளும் கட்டிக்கொடுத்துள்ளனர் இவற்றை எழுதுங்கள். அவர்களை இழிவு படுத்தக்கூடியதாக எதுவும் எழுதவேண்டாம் என உணர்ச்சிவயப்பட்டுக் கூறினார்

**பெண் அதிகாரி**

ஒரு கலைப் பட்டதாரிக்கு 85 ஆயிரம் ரூபாவையும் ஒரு பொறியியலாளருக்கு 4 லட்சம் ரூபாவையும் ஒரு டாக்டருக்கு 4½ லட்சம் ரூபாவையும் அரசு மக்கள் பணத்தில் இருந்து செலவு செய்து அவர்களை உருவாக்குகின்றது

இவ்வாறு மக்கள் பணத்தில் உருவானவர்கள் வெறுமனே சாதி வெறிபிடித்த, அடிப்படை திமிர் கொண்ட, மக்களின் கஷ்ட நஷ்டங்களை புரிந்து கொள்ளாதவராக இருக்கக் கூடாது

இப்படியான குணங்களை இல்லாது ஒழிப்பதே ராகிங் இவ்வாறு கூறினார் அரசாங்கத்தில் உயர்பதவி வகிக்கும் பட்டதாரியான ஒரு குடும்பப் பெண்.

அவர்மேலும் கூறுகையில்,

மாணவர்களுக்கு, கஷ்ட நஷ்டங்களை, முழுச் சக்தியைப் பிரயோகிக்கும் தன்மையை, பொறுப்புணர்ச்சியை, புரிந்துணர்வை ஊட்ட ராகிங் தேவை

இதனை, காரில் செல்லும் பெண் நடந்து செல்பவனின் கஷ்டத்தை உணர்கிறாள் கிராம பின்தங்கிய பாடசாலை மாணவரும், நகர பாடசாலை மாணவரும் சமமாகுகிறார்கள்

கத்தி கையையும் வெட்டும் பழத்தையும் வெட்டும் அதற்காக கத்தியை பாவிக்காமல் விடக்கூடாது

பல்கலைக்கழக மாணவர் உலகம் ஒரு தனி உலகம். தமது பிரச்சினைகளை, கஷ்டங்களை அவர்கள் தாமே தீர்க்க வேண்டும். அப்போது தான் சமுதாய பிரச்சினைகளை தீர்க்கும் மேன் மக்களாக அவர்கள் உருவாவார்கள் என்றார்

**தாயார்**

மருத்துவபீட மாணவி ஒருவரின் தாயாரிடம் இதுபற்றி வினவிய போது;

'எனது மகளை வீட்டிலே வைத்து என் முன்னால் ராகிங் செய்தார்கள். இதை பொறுக்க முடியாமல் ஒரு நாள் நான் கண்டித்தேன். பின்னர் நான் கண்டித்த மாணவன் எனது மகளை வளாகத்தில் கடுமையாக ராகிங் செய்ததை கேள்விப்பட்டேன்

இவ்வாறான தீவிரமான நடவடிக்கைகள் இருக்கும் வரை ராகிங் ஒழிக்கப்பட வேண்டும்' என்றார்.

'மேலும் எமது தமிழ் பண்பாட்டுக்கு ராகிங் ஒத்துவரக் கூடிய ஒரு விடயமல்ல.

தற்போதைய செய்திகளை கேள்விப்படும் போது மகளின் எதிர்காலம் பாதிக்கப்படுமோ என்று பயப்பட வேண்டியுள்ளது.

வேண்டுமாயின் பெண்களை பெண்களும், ஆண்களை ஆண்களும் வளாகத்துள் வைத்து ராகிங் செய்யலாம். வீட்டிலும், ரோட்டிலும் செய்வது

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாணய மாற்று விவரம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது இலங்கை வங்கியின் 22 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 41. 58 |
| அமெ. டாலர் | 27. 98 |
| இந்திய ரூபா | 2. 21 |
| மார்க் (ஜெர்மனி) | 13. 56 |
| கனடா டாலர் | 19. 93 |
| பிராங் (பிரெஞ்சு) | 4. 14 |
| பிராங் (சுவிஸ்) | 16 80 |
| [illegible] டாலர் | 10. [illegible] |

## அரசாங்க அலுவலகங்களில்... 'சிகதி'

### வங்கிக்கிளைகளைத் திறந்தால் என்ன?

இங்குள்ள விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் முதலியவற்றையும் அவர்களது பிற தேவைகளையும் பூர்த்தி செய்யவேண்டியது உரிய திணைக்களங்களினது கடமையும் பொறுப்பும் ஆகும். உதாரணமாக உருளைக்கிழங்கு விநியோகம் சம்பந்தமாக பேசப்படுகிறது. ஆனால் கண்டிப்பான நடவடிக்கைகள் வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்னர் உருளைக்கிழங்கு விநியோகப் பொறுப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் கையளிக்கப்பட்டபொழுது அதில் பல சீர்கேடுகள் இடம்பெற்று விசாரணைகளும் இடம்பெற்றன. இவற்றை எல்லாம் தவிர்ப்பதற்கு திணைக்கள உத்தியோகத்தினர் நேரடி மேற்பார்வை தேவை.

* *

தொலைபேசித் திணைக்களம் தொலைபேசியை வழங்குவதற்கு முன்னர் விண்ணப்பதாரிகளை பதிவு செய்ய முற்பணத்தைப் பெற்றிருந்தும் இதுவரை இதுபற்றி எதுவித விபரங்களையும் தெரிவிக்கவில்லை எனத் தெரிகிறது இதற்கு ஏதும் காரணங்கள் இருக்குமோ?

* *

சில திணைக்களங்கள் சுகாதாரமற்ற முறையிலும் சுவர்கள் வெள்ளை பூசப்படாமலும் இருக்கின்றன இதனை திணைக்கள உயர் அதிகாரிகள் கவனித்தல் நல்லது. கடமைக்கு மட்டும் சென்றால் போதாது பிற ஊழியர்கள் கடமை செய்யும் இடங்களையும் பார்வையிடல் வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் என்ன சூழ்நிலையில் கடமை புரிகின்றனர் என்பது மேல் அதிகாரிகளுக்கும் தெரிய வரும்.

* *

பெரிய தபால் கந்தோர்களில் காசுக்கட்டளை பெற முடியாது. உபதபால் நிலையங்களுக்கு செல்லவேண்டியுள்ளதாக வாசகர் ஒருவர் குறைபட்டுக்கொண்டார் தபால் கந்தோர்கள் பொதுமக்களுக்கு சேவைசெய்யவே ஏற்படுத்தப்பட்டன தற்பொழுது இவை யாருக்கு சேவைசெய்கின்றன என்பது தெரியவில்லை.

* *

மூடப்பட்ட மக்கள் வங்கிகளை அந்த இடங்களில் மீண்டும் இயங்க வைக்க வேண்டும் எனப் பலர் விரும்புகின்றனர்

இதற்கு பொறுப்பான மாவட்ட அதிகாரிகள் இதனை கவனத்தில் எடுத்துக் கொள்ளல் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு உதவி செய்வதாகும்.

* *

பிரதான வீதிகள் பல திருத்தப்படவில்லை என செய்திகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன சில பிரதான வீதிகள் கண்டிப்பாக, காலதாமதமின்றி திருத்தப்படல் வேண்டும் வீதிகள் தற்பொழுது திருத்தப்பட்டுக் கொண்டு வருவது வரவேற்கத்தக்கதாகும்.

* *

அரச வெளிக்கள பணியாளர்கள் தொடர்ச்சியாக வெளியில் நிற்கக்கூடாது. திணைக்களங்களிலும் குறிப்பிட்ட காலங்களிலாவது இருத்தல் வேண்டும்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

மலிவான கட்டணத்தில் விமான டிக்கட்டுகள்

அமெரிக்கா, லண்டன், அவுஸ்திரேலியா

நோர்வே (ஒஸ்லோ, பேகன்) செல்லும் மாணவர்கட்கு கழிவு தொகையில் (Discount Fare) விமான சீட்டுகள்

மற்றும்

- பாஸ்போட், பொண்ட், விசா ஒழுங்குகள்
- CONFIRMATIONS, RE-CONFIRMATIONS, CANCELLATIONS.
- இந்தியா செல்லும் பயணிகளுக்கு விஷேச சலுகைகள்: கொழும்பில் தங்குமிடம், கட்டுநாயகா விமான நிலையத்துக்குக் கூட்டிச் செல்லும் வசதி யாவும் செய்து தரப்படும்.

Niipon Tele Travels (Pte) Ltd.,
2 G, STANLEY ROAD, JAFFNA, T'Phone: 23364

பிரயாண ஒழுங்குகள்

★ ஹொலண்ட்
★ பெல்ஜியம்
★ டென்மார்க்
★ பிரான்ஸ்
★ ஜேர்மன் ★ கனடா
★ ஸ்பெயின் ★ சுவீடன்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும் மற்றும் பாஸ்போட், விசா, பொன்ட், (BOND) ரிக்கட் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ.
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி பீடம் ஏறுகின்றான் வீரப்புலியார் சங்கிலி

நல்லூர் மன்னன் பரராஜசேகரன் தன் பட்டத்து ராணி இராஜலட்சுமியம்மாளின் இளைய குமாரன் பண்டாரத்துக்கு முடிசூட்டுவிழா நடத்தி முடித்த பின்னர் தனது இரண்டாம் மனைவி வள்ளியம்மையின் மூத்த புதல்வன் பரநிருபசிங்கனை இராச்சியத்தின் இரண்டாம் அதிபதியாக்கியதுடன் அவனுக்குக் கள்ளியங்காடு, அச்சுவேலி, அராலி, உடுப்பிட்டி, மல்லாகம், சண்டிலிப்பாய், கச்சாய் ஆகிய ஏழு கிராமங்களையும் செப்புத்தகட்டில் பட்டயமெழுதிக்கொடுத்திருந்தார்.

அதன் பின்—

மன்னன் பண்டாரம் நந்தவனத்தில் உலாவருகையில் அங்கு மறைந்திருந்த ஒருவனால் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட பின்னர் சிறிது காலம் நல்லூர் சிம்மாசனம் காலியாகவிருந்த நாட்களில் இராச்சியத்தில் கள்வரின் கன்னக்கோலும், வழிப்பறித் திருடர்களின் தொல்லையும் பெருகத்தொடங்கியிருந்தது. இதனால் சங்கிலி ஆட்சிபீடமேறியதும் கள்வரையும் வழிப்பறித் திருடரையும் காணகடூரமாகத் தண்டிக்கவே இராச்சியத்தில் கள்வர் தொல்லை குறையத் தொடங்கிற்று.

அது மட்டுமன்றி—

சங்கிலியின் பாட்டன் கனகசூரிய சிங்கையாரிய மன்னன் காலத்தில் நல்லூர் இராஜதானி மீது படையெடுத்த சிங்கள வருக்குத் துணையாக கூலிப்படையாக, ஜாவுகச் சேனையொன்றும் வந்திருந்தது. இந்த ஜாவுகர் பின்னர் நல்லூரிலிருந்து சற்றுத் தொலைவில் சேரி அமைத்து வாழத் தொடங்கினர். அந்த இடம் ஜாவுகர்சேரி என வழங்கலாயிற்று. அச்சேனைத் தளபதியின் இனபந்துக்கள் வாழ்ந்த இடம் ஜாவா கோட்டை என வழங்கலாயிற்று. (காலப்போக்கில் ஜாவுகர்சேரி என்ற பெயர் சாவகச்சேரி என்றும் ஜாவா கோட்டை என்ற பெயர் சாவாங்கோட்டை என்றும் உருமாறிக் கொண்டது) இந்த ஜாவுகர் மேலும் தன் இராச்சியத்தில் தொடர்ந்து வசித்து வருவதை விரும்பாது வெறுத்த சங்கிலி மன்னன் அங்கு சென்று ஜாவுக குடிகளைச் சிதற அடித்து ஒருவர் மீதமில்லாமல் தெற்கே துரத்தி விட்டான். இந்த அந்நியர் மீண்டும் வேற்று அந்நியர்களின் கையாட்களாகவும், கைக்கூலிகளாகவும் மாறக்கூடும் என்பதனாலேயே தீர்க்க தரிசனத்துடன் அவர்களை அங்கிருக்க வொட்டாமல் அடித்துத் துரத்தினான். தன் இராச்சியத்தில் மேற்கொண்டும் எதிரிகளின் வாலாட்டம் இருக்கக் கூடாதென்பதற்காக ஏலவே தஞ்சாவூரிலிருந்து சமரவாகு தேவன் என்ற சேனைத் தளபதியின் தலைமையில் வேளக்காரப் படையைத் தருவித்து வைத்திருந்தான் மன்னன். அச்சேனை வல்வெட்டித் துறையிலே பாளையமடித்திருந்தது.

## காட்டில் முளைத்த களிமண் கோட்டை

அது அவ்வாறிருக்க—

வியாபாரம் என்ற போர்வையில் யாழ்ப்பாண இராச்சியத்துக்குள் பிரவேசித்த வெள்ளைப் பறங்கியர் மந்திரி பரநிருபசிங்கனின் பரிந்துரையின் நிமித்தம் மன்னனின் அனுமதியைப் பெற்றபின் வியாபாரம் காரணமாக அங்குமிங்கும் அலைவதாகப் பாசாங்கு செய்து வீதிகள், ஊர்கள், கிராமங்கள் எல்லாவற்றையும் அறிந்து வைக்கத் தொடங்கினர். யாழ்ப்பாண இராச்சியத்தில் பெரும் சூழ்ச்சியொன்று உருவாகிக் கொண்டிருந்தது.

சங்கிலி மன்னன் கூர்மதியும், தீர்க்க சிந்தனையும் மிக்கவனானாலும் மந்திரி பரநிருபசிங்கன் தன் தமையன் என்பதால் அவன் மீது முற்று முழுதான நம்பிக்கையை வைத்திருந்தான். அதன் காரணமாகவே மந்திரி பரநிருபசிங்கன் காக்கை வன்னியனுடன் வைத்திருந்த கபடமான தொடர்பை மன்னன் உணர முடியாமல் போயிற்று. காக்கைவன்னியன் பறங்கியருடன் உறவு வைத்திருந்தது பரம இரகசியம்.

நாட்கள், வாரங்கள், மாதங்கள் ஓடிக் கழிந்தன...

## ம. க. அ. அந்தனிசில்

பறங்கியர் தமக்குத் தங்குமிடமொன்று கட்டுவதற்கு மன்னனிடம் அனுமதி கோரியபோது, அதற்காகவும் பரிந்துரைத்த மந்திரி பரநிருபசிங்கன் மன்னன் கொடுத்த தத்துவப்படி பறங்கியர் வாழ்விடம் அமைத்தார்களா? வீடு கட்டிக் கொண்டார்களா? எங்கே எப்படிக் கட்டிக் கொண்டார்களென்பதை அறிந்து மன்னனுக்குத் தெரிவிக்க வேண்டியது அவனது இராஜரீகக் கடமையாகும். நாட்டு நடப்புகளை மன்னனிடம் அறிவிப்பதும் ஆலோசிப்பதும் மந்திரியின் கடமைதானே! ஆனால் மந்திரி பரநிருபசிங்கன் அவ்வாறு செய்யவில்லை. மேன்மையான விசுவாசமும் மிகத் திறமும் வாய்ந்த ஒற்றர்படை இருந்தபோதிலும் மன்னன் இவைபற்றி அறிய முடியாதிருந்தமை பெரும் மர்மத்துக்கிடமான புதிர்தான். எல்லாவற்றிற்கும் மந்திரி பரநிருபசிங்கன் குறுக்கே நிற்கும்போது......... வேலியே பயிரை மேய்ந்தால் யார் என்ன செய்ய முடியு ?

## பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டு மோதிய நல்லூர் அரசு (மூன்று)

ஓர் நாள்......

வேட்டையாடுவதற்காக சங்கிலி மன்னன் தன் வெண்குதிரை மீதேறி பண்ணைக் காட்டுக்குச் செல்கிறான். அவன்கூடவே துணைத் தளதி கரைப்பிட்டி வன்னியனும் மற்றுமிரு சேவகர்களும் தத்தம் குதிரைகளில் செல்கின்றனர். டக்...டக்..டக்... என்று குளம்பொலி கிளம்ப வேகமாகச் சென்ற குதிரைகள் பண்ணைக்காட்டுக்குள் நுழைந்ததும் வேகத்தைக் குறைத்துக் கொள்கின்றன. (அடர்ந்த மரங்கள் நிறைந்ததான அன்றைய பண்ணைக்காடு வில்லூன்றி முதல் இன்றைய யாழ் மத்திய கல்லூரி வரை விரிந்திருந்தது) பண்ணைக் காட்டில் வேட்டைக்காக நுழைந்த சங்கிலி மன்னன் காட்டுக்குள்ளிருந்து டங்...டங்...டங்... என்ற மணியோசை போன்ற புதுமையான ஒலி கிளம்பவே ஆச்சரியமுற்றவனாய் அவ்வொலியைக் காது கொடுத்துக் கேட்டுப் பின் மெதுவாக அவ்வொலி வரும் திசையை நோக்கித்தன் புரவியைச் செலுத்துகிறான். துணைத் தளபதியும் இரு சேவகர்களும் மன்னனைத் தொடர்கின்றனர்.

## கண்ணின் மணிபோல் சொந்தத் தாய்த்திரு நாடு காக்க சங்கிலி மன்னன் போர்க் குரல்

பண்ணைக் காட்டின் நடுப்பகுதிக்குச் சென்ற மன்னன் அங்கே கண்டகாட்சி அவனைப் பிரமிக்கவும் அதிர்ச்சியடையவும்செய்கிறது. காட்டின் நடுவே மரங்கள் அழிக்கப்பட்டு ஓர் சிறு களிமண் கோட்டை எழும்பியிருந்தது. அதுவே மன்னன் அதிர்ச்சியடைந்ததற்கான காரணம். இதுயாவும் வெள்ளைப் பறங்கியரின் குள்ள நரிவேலையென்பதை ஊகித்துக் கொண்ட மன்னன் ஆவேசம் கொண்டவனாய்ப் பற்களை நறும்பியவாறு கோட்டை வாயிலை நோக்கித் தன் புரவியைச் செலுத்துகிறான். டங்... டங்...டங்...என்ற ஓசை ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. கோட்டை வாயிலில் காவலிருந்த இரு பறங்கியர் எதிர்பாராத விதமாக மன்னனைக் கண்டதும் பதற்றமுற்று உள்ளே ஓடிச்சென்று சேதி சொல்கின்றனர்.

கோட்டை வாயிலை நெருங்கிய மன்னன் உள்ளே ஏராளமான பறங்கியர் நடமாடுவதையும் நெருப்புலையில் இரும்பு காய்ச்சப்பட்டு ஆயுதமாகத் தட்டப்படுவதையும் அவதானித்து ஆத்திர முற்றவனாய்

(7ஆம் பக்கம் பார்க்க)

# போற்றிேனரைக் காக்கும் கண்ணன்

## பொய்யர் தம்மை மாய்ப்பான்

இருளின் பின் ஒளியும், துன்பத்தைத் தொடர்ந்து இன்பமும் புயலைத் தொடர்ந்து அமைதியும் ஏற்படுகின்றன. எவரும் என்றும் துன்பங்களை அனுபவிப்பதில்லை. நல்லவர்களை நலிவுறச் செய்யும் கெட்டவர்களுடைய செயல்களும் நீண்டகாலத்துக்கு நிலைத்திருக்கமாட்டாது என்பதைப் புராணங்களும் இதிகாசங்களும் வலியுறுத்துகின்றன

துவாபரயுக முடிவில் வடமதுராபுரியிலே கம்சன் கொடுங்கோலாட்சி செலுத்தி மக்களை மிகத் துன்புறுத்தினான். அங்கு நீதி, தர்மம், நல்லாட்சி என்பன நிலவவில்லை. தனது சொந்த நன்மை கருதி உடன் பிறந்த சகோதரி தேவகியையும், வாசுதேவரையும் சிறையில் அடைத்து பல இன்னல்களைப் புரிந்தான்.

கடுமையான காவலின் மத்தியிலே அவர்களிருவரும் தங்களுடைய பழவினைகளை நொந்து,தெய்வத்தை நம்பி மிகக்கவலையோடிருந்தனர். சிறைச்சாலைக்கு வெளியேயும் நிலைமை அவர்களுக்கு சாதகமாக அமையவில்லை காரிருள், கடும் மழை, இடி, மின்னல், இமுனா நதிப் பெருக்கு என்பன எல்லாம் ஒன்று சேர்ந்து அவர்களுடைய துன்பத்தை அதிகரித்தன.

### அவதாரம்

வாசுதேவரும் தேவகியும் செய்த நற்தவம் காரணமாக கோகுலம் குதூகலிக்கவும், உலகம் உய்யவும், கம்சனுடைய ஆட்சிக்கு ஒரு முடிவு ஏற்படவும்—

> 'நிலவே! நீ ஒளி சூழ அழகாகக் காட்சி அளித்தாலும் என்னுடைய குழந்தையின் முகத்திற்கு நிகராக மாட்டாய் என் குழந்தை உனை அழைக்கிறதே அதன் கையிலே நோ ஏற்பட்டு விடும் விரைந்து வா!!''

ஆவணி மாதம். கிருஷ்ண பட்ஷம் அட்டமி நள்ளிரவு வேளை கண்ணன் திருவவதாரம் செய்தான்.

திருமால் உருவத் திருமேனி தாங்கி நீதியையும் தர்மத்தையும் நிலைநாட்ட இதுவரை எடுத்த ஒன்பது அவதாரங்களில் கண்ணன் அவதாரம் மிக மகிமை வாய்ந்தது.

பகவான் அவதாரம் எடுத்ததன் நோக்கம் உயர்ந்த தத்துவங்களை மக்களுக்கு உணர்த்தி, அவர்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவதற்கேயாகும்

### சர்வவியாபகன் நீலவண்ணன்

தேவகி மைந்தனாகப் பிறந்து, யசோதை இல்லத்தில் வளர்ந்த கண்ணனை சங்ககாலம் தொடக்கம் பாரதியார் காலம் வரை பல புலவர்களும் கவிஞர்களும் போற்றிப்பாடியுள்ளனர்.

அவர்கள் கண்ணனைக் குழந்தையாக, பஞ்சவர்க்குத் தூது சென்றவனாக, கீதாசிரியனாக பல நிலைகளில் வைத்து பாடியுள்ளனர். கண்ணன் கார்மேக வண்ணனாகக் காட்சியளிக்கிறான் அவனுடைய பவளவாயும், கமலச்செங்கண்ணும்அழகுக்கு அழகுசெய்யும் முறையில் அமைந்துள்ளன. எல்லையில்லாது விளங்கும் சமுத்திரமும் ஆகாயமும் நீலநிறமாக இருக்கின்றன. கண்ணனுடைய நீல நிறம் சர்வ

> வரும் புதன்கிழமை கிருஷ்ணஜயந்தி அதனை முன்னிட்டுப் பிரசுரமாகும் சிறப்புக்கட்டுரை இது.

## மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## கடல் கடந்த கடிதம்

### கலையைக் கருவியாக்கு

தம்பி,

ஏதேது, கலக்கடியில் கடவுள் பக்தியும் அதிகரித்து விட்டதோ என்று எண்ணுகிறாயா? ஏமாந்து போனாய்!

இடிபட்டாலும் அடிபட்டாலும் பொன்னாலைக் கடவுள் இன்றும் நின்று அருள்பரிபாலிக்கத் தவறவில்லை! ஆனால், தம்பி, நான் போற்றச் சொல்வது, மனிதத் தெய்வமாக விளங்கிய பொன்னாலைக் கிருஷ்ணனை!

ஆமாம்! பொன்னாலையில் ஒரு தலைமுறைக்கு முன் வாழ்ந்தவர் தான் கிருஷ்ணன்! நாடக நடிகர் — வரகவி — சுதேசப் பொருள் பிரசாரகர்!

பபூனாக — கோமாளியாக — பங்குபற்றிய நாடகங்கள் ஏராளம்! ஏராளம்!! தென்னிந்திய நடிகர்கள் இங்கு வந்து நாடகங்கள் போட்ட போதெல்லாம் சவால்கள்! போட்டிகள்! கலைப் பிரியர்களுக்கோ கலகலப்பு!! நாடக மேடையிலேயே திடீர்ப் பாடல்கள்! வரகவியல்லவா? கோமாளியாக நடித்தாலும், தம்பி காலத்திற்கேற்ற கருத்துப் பிரசாரம்!

இரண்டாவது மகாயுத்தகாலம் - பொருட் பஞ்சம் — உணவுப் பஞ்சம்! இன்றைய நெருக்கடியை விட மோசமான காலம்! "உணவுற்பத்தியைப் பெருக்கு — சுதேசப் பொருட்களையே வாங்கு — பனை வளத்தைப் பயன்படுத்து!"— இது அவரது தீவிர பிரசாரத்தின் அடிநாதம்!

பனையோலைத் தொப்பி — பனையோலைப்பெட்டி- அதற்குள் பனையோலையாற் செய்த கடதாசியில் சிறு நூல்கள் — அதில் பனைவளம் பற்றிய, சுதேசப்பொருள் உற்பத்தி பற்றிய பிரசாரப் பாடல்கள்!

சந்திகள் தோறும் நிற்பார் — ஆடுவார்! பாடுவார்!! காண வேடிக்கையாகத் தானிருக்கும்! சிறுவனாயிருந்தபோது. அவரது கலையால் மட்டுமல்ல, கருத்துக்களாலும் கவரப்பட்டவர்களில், தம்பி, நானும் ஒருவன்!

இன்றைய நெருக்கடி நிலையில் — உள்நாட்டுப் பொருள் உற்பத்தியில் - அவற்றின் பாவனையை ஊக்குவிப்பதில் - பிரசாரம் அவசியம்! கலை மூலம் கருத்துப் பிரசாரம் அரும்பாகி மொட்டாகியுள்ளது! ஆயிரம் மலர்களே மலருங்கள்!

பொன்னாலைக் கிருஷ்ணனின் பாடல்கள் — கலைகள் — புத்துயிர் பெறவேண்டாமா? அவருக்கு வாரிசுகள் இல்லையா? ஏராளமாக உண்டு!

பொன்னாலைக் கிருஷ்ணனைப் போற்று! கலையைக் கருவியாக்கு!!

அன்புடன்
— சிவா —

# தமிழக இடைத்தேர்தல்

## வீரப்பன் - ஜெயலலிதா

## இழுபறிக்கு முடிவு கட்டுமா?

தமிழகத்தில் அரசியல் மீண்டும் சூடுபிடித்துள்ளது.

திருநெல்வேலி, அருப்புக்கோட்டை இடைத்தேர்தல்கள் அதற்குக் களம் அமைத்துக் கொடுத்து உள்ளன.

தொடர்ச்சியாகப் பத்தாண்டுகள் ஆட்சி நடத்தி சாதனை புரிந்து உள்ள அதிமுகவின் வரலாற்றில் இந்த இரண்டு இடைத்தேர்தல்களும் புதிதாக ஒன்றையும் சாதிக்கப் போவது இல்லை.



எம். ஜி. ஆர்.

ஆட்சிலகானைப் பிடிக்க பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வரும் திமுக தலைவர் கலைஞர் கருணாநிதிக்கு சட்டசபையின் பெரிய மாற்றத்தை இவை ஏற்படுத்தப் போவதும் இல்லை

உள்ளூராட்சித் தேர்தல்களில் தி.மு.க அடைந்த வெற்றி, மக்களின் மனமாற்றத்தில் கிடைத்ததா என்பதைக் கலைஞர் கருணாநிதி அறிந்து கொள்ள இந்த இடைத்தேர்தல்கள் உரைகல்லாக அமையலாம்.

> தமிழ் நாட்டில் திருநெல்வேலி, அருப்புக்கோட்டை இடைத்தேர்தல்கள் இம்மாதம் 31 ஆம் திகதி நடைபெறவுள்ளன. அதுபற்றிய ஒரு கண்ணோட்டமே இக்கட்டுரை.

### அ தி மு க வுக்கு சோதனைகள் உருவாகலாம்

ஆனால் அ-தி மு.கவுக்கு இந்த இடைத்தேர்தல்கள் பெரும் சோதனையை உருவாக்கி விடக்கூடும் என்று கூறப்படுகிறது.

1984 இல் திடீர் சுகயீனம் அடைந்து அமெரிக்கா சென்று திரும்பிய பின்னர் எம்.ஜி.ஆரால் நிம்மதியான ஆட்சி செலுத்த முடியாதுள்ளது.

அந்த அளவுக்கு கட்சிக்குள் உட்பூசல்கள். ஆளுக்கு ஆள் குழிபறிப்பு வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

எம்.ஜி ஆருக்கு ஆதரவு கொடுத்து வருவதன் மூலம் தனது செல்வாக்கை வளர்ப்பதில் இந்திரா காங்கிரஸ் ஈடுபட்டு உள்ளது

அதன் காரணமாக இரண்டு இடைத்தேர்தல்களிலும் இந்திரா காங்கிரஸ் போட்டியிடவில்லை.

### வீரப்பனும் ஜெயலலிதாவும்

ஜெயலலிதாவே இந்திரா காங்கிரஸ் ஆதரவாளராகத்தான் செயல்படுகிறார் என்பது வீரப்பனின் குற்றச்சாட்டு



மு. கருணாநிதி

எம் ஜி.ஆரின் பின்னர் அ தி மு.க உடைந்தால்' ஜெயலலிதாவின் தலைமையில் ஒரு பிரிவு இந்திரா காங்கிரஸுடனும்-

வீரப்பனின் தலைமையில் ஒரு பிரிவு தி மு.

- நிபன்ராஜா -

(7 ஆம் பக்கம் பார்க்க)

# சிங்களமயப்படுத்தப்பட்ட இராணுவம்

# இலங்கைத் தமிழரை கொடுமைப்படுத்துகிறது!

கடந்த சில ஆண்டுகளாக இலங்கை அனுபவித்து வரும் இன்னல்களை உலகில் சில நாடுகளே அனுபவித்துள்ளன.

அழகு மிகு கடற்கரைகளைக்கொண்ட இலங்கை சிவில் யுத்தம் ஒன்றில் சிக்கியுள்ளது.

தீவின் பெருமக்களுக் களங்கத்தை உருவாக்கியது இலங்கை கடைப்பிடித்து வந்த அரசியல் பாதையே. பிரச்சினைகள் குழப்பமான நிலையைத் தோற்றுவித்து உள்ளன.

தமிழ்க்குடிமக்கள் மீது தொடர்ச்சியாகப் பாதுகாப்புப்படையினர் நிகழ்த்தி வருவதாகக் கூறப்படும் அடக்குமுறைகளே இக்குழப்ப நிலைமைக்குக் காரணம்.

### ஸ்ரீலங்காமீது சர்வதேச கவனம்

இந்த அடக்குமுறைகள் சர்வதேச கண்டனங்களைப் பெற்றன

இதன் காரணமாக இந்து சமுத்திரத்தில் சொர்க்கத் தீவாக விளங்கும் இலங்கை சர்வதேச கவனத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இப்படிப்பட்ட சர்வதேச ஆராய்ச்சிக்கு இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள லத்தின் அமெரிக்க நாடுகள் அல்லது பழங்குடியினர் வாழும் ஆபிரிக்க நாடுகள் மட்டுமே உட்படுத்தப்பட்டு வந்தன.

இலங்கைப் பிரச்சினை குழப்பகர நிலையை அடைந்ததற்குக் காரணம், ஆயுதப்படையினரின் நடத்தையே. சமாதான பேச்சுக்களைத் தொடர்ந்து ஆயுதப் படையினரின் நடத்தை பெரும் பிரச்சினையாக உருவெடுக்கப்போகிறது.

வடக்கும் கிழக்கும் தங்களின் சுதந்திர தாயகம் என்று தமிழ்ப் பிரிவினைவாதிகள் கோருகின்றனர். தற்போதைய சமாதானப் பேச்சுக்களின் போது அக்கோரிக்கை நிச்சயம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

> பி.பி.ஸி செய்தியாளராக கொழும்பில் பணிபுரிந்த ஹம்ரிஷ் ஹொக்ஸிலியை இலங்கை அரசு அண்மையில் வெளியேற்றியது
>
> அவர் வெளியேறு முன்னர் கொழும்பில் இருந்து கடைசியாக அனுப்பி லண்டன் கார்டியன் (11-8-86) நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.

தமிழருக்கு மாகாண சுயாட்சியை வழங்கி இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வெற்றி காணலாம் என்று மத்தியஸ்தம் வகிக்கும் இந்தியாவும் இலங்கை அரசும் கருதுகின்றன

### மாகாணசபையும் இராணுவமும்

இம்முயற்சி பலனளிக்குமாயின் புதிதாக உரு... சபைகளுக்குச் சட்டம்— ஒழுங்கு பராமரிப்பு அதிகாரம் வழங்கப்படும். அதனைப் பிரயோகித்து மாகாணசபை உள்ளூர்களில் இருந்து திரட்டப்படுபவர்களைக் கொண்ட பொலீஸ் படையை அமைக்கும். தற்போதிருப்பதுபோல் இலங்கை இராணுவம் சட்டம் — ஒழுங்கு பராமரிப்பில் ஈடுபடமுடியாது.

அடையாளத்திற்காக குறைந்த தொகை இராணுவம் தமிழ்ப் பகுதிகளில் வைக்கப்பட்டிருப்பினும் பெரும்பான்மை இராணுவம் தென்பகுதி முகாம்களுக்கு அனுப்பப்படும். அப்படி இன்றி இரா... தமிழ்ப் பகுதியில் தொடர்ந்து நிலைகொள்ளுமாயின் அமைதியை நிலைநாட்டும் சந்தர்ப்பம் ஏற்படாது

அந்த நிலையில் நவீன ஆயுதங்களை உபயோகிப்பதில் நன்கு பயிற்சி வழங்கப்பட்ட ஆயிரக்கணக்கான சிப்பாய்களை எப்படிப் பராமரிப்பது என்ற கேள்வி எழுகின்றது.

### யுத்தருசியும் படிப்பும்

இப்போது தான் இந்த சிப்பாய்களுக்கு யுத்த 'ருசி' தட்டியுள்ளது.

"நாம் கீழ் மட்டத்தில் இருந்து படிக்க வேண்டியிருந்தது! பல தவறுகளையும் விட வேண்டியிருந்தது" - இப்படி ஒரு சிரேஷ்ட அதிகாரி சொன்னார்.

"நோட்டோ இராணுவ தரத்துக்கு வர இன்னும் எமக்கு நீண்ட காலம் எடுக்கும். ஆனால் நாம் வளர்ந்து வருகின்றோம் தீவிரவாதிகளுக்கு எதிராக வெற்றி கண்டு வருகிறோம். நல்ல சிப்பாய்கள் என்பதைப் போர்க்களத்தில் நிரூபிக்க எம் படையினர் விரும்புகின்றனர்".— இப்படி அந்த சிரேஷ்ட அதிகாரி மேலும் சொன்னார்

### களம் காணாத இராணுவம்

ஆரம்பத்தில் இலங்கை இராணுவம் யுத்தம் நடத்தும் எண்ணத்துடன் அமைக்கப்படவில்லை; வெறும் அணிவகுப்பு மரியாதைகளில் பங்குபற்றும் எண்ணத்துடன் தான் அமைக்கப்பட்டது

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது கூட நேசநாடுகள் இலங்கை இராணுவத்தை இராணுவ நடவடிக்கைகளில் பங்குபற்ற வருமாறு அழைக்கவில்லை.

தமிழர் யுத்தம் தொடங்குவதற்கு முன்பதாக இலங்கை இராணுவம், 1971 கிளர்ச்சியை அடக்கவே பயன்படுத்தப்பட்டது.

அந்தப் புரட்சி விரைவாக, கொடூரமாக வெளிநாட்டு உதவியுடன் அடக்கப்பட்டது.

### புதுமையான சிநேகிதரும் ஆயுத உதவியும்

இன்று இலங்கைக்கு உதவ புதுமையான 'பிராண சிநேகிதர்கள்'

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கள்வரைக் காட்டியதும் கைமேற் கிடைத்த பலன்

வயலூர் என்ற கிராமத்தில் சுதாகர் என்பவன் தன் பாட்டியோடு வசித்து வந்தான். அவனுக்கு வயலூரில் வேலை கிடைக்கவில்லை. அதனுல் அயல் நகரான சந்திரபுரி சென்று வேலை செய்யப் போவதாகப் பாட்டியிடம் கூறினுன். சந்திரபுரியை ராஜசிம்மன் என்னும் மன்னன் செங்கோல் ஆட்சி செய்து வந்தான். அந்த நாள் வந்தது. பாட்டி அவனை வாழ்த்தி உணவுப்பார்சலும் கொடுத்து அனுப்பி வைத்தாள்

சுதாகர் நீண்டதூரம் நடந்து வந்த களைப்பால் ஒரு மரத்தடியில் தங்கி உணவைச் சாப்பிட்டான். சிறிது நேர ஓய்வின் பின் மீண்டும் நடந்தான். மாலை நேரம் சந்திரபுரியை அடைந்தான். நடந்து வந்த களைப்பால் ஒரு மடத்தில் தங்கினுன். சிறிது நேரம் உறங்கி விட்டுக் கண்விழித்தான் இருவர் அங்கே உரையாடிக் கொண்டிருந்தனர்.

'நாம் நகைகளைப் பங்கிட்டுக் கொள்வோம்' என ஒருவன் கூறினுன். அவர்கள் திருடர்கள் என அறிந்த சுதாகர் பயத்தால் கண்களை மூடிக் கொண்டான். அவர்கள் உறங்கியதும் எழுந்து நேரே அரண்மனைக்குச் சென்ருன். மன்னரிடம் சம்பவத்தைக் கூறினுன்

சுதாகருடன் சில வீரர்களை மன்னன் அனுப்பினுன். கள்வர்களைக் கைது செய்து சிறையிலிட்டான். அது அரச அதிகாரியின் வீட்டு நகைகள். அரச அதிகாரி அவனைப் பாராட்டிப் பரிசளித்தான் மன்னன் தனது அரச சபையில் வேலை கொடுத்தான். சுதாகர் பாட்டியையும் சந்திரபுரி அழைத்து வந்தான்.

சுதாகர் உண்மையுடன் நேர்மையாக நடந்தபடியினுல் அவனுக்கு நல்ல வேலையும் மதிப்பும் மரியாதையும் கிடைத்தன.

ஆகவே, நாம் சிறுபராயத்திலிருந்தே நல்ல பழக்க வழக்கங்களைப் பழகிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நல்ல பெயருடன் நன்கு வாழலாம் *

- நா. ஸ்ரீரங்கன் -




## புவியியற் பட்டப்பெயர்கள்

| வினுக்களும் | விடைகளும் |
|---|---|
| 1 இருண்ட கண்டம் | 10. அமிர்தசரஸ் |
| 2. இந்தியாவின் வாயில் | 9. ஹுவாங்கோ நதி |
| 3. புனித நாடு | 8 உரோம் |
| 4. நைலின் கொடை | 7. ஜிப்ரோல்ரர் |
| 5 நள்ளிரவுச் சூரிய நாடு | 6. ஜப்பான் |
| 6. சூரியன் உதிக்கும் நாடு | 5. நோர்வே |
| 7. மத்திய தரைக் கடலின் திறவுகோல் | 4. எகிப்து |
| 8. ஏழுமலை நகர் | 3. பாலஸ்தீனம் |
| 9. சீனுவின் துயரம் | 2. பம்பாய் |
| 10. பொற்கோயில் உள்ள நகரம் | 1. ஆபிரிக்கா |

ப. நாண்டீபன்,
(இந்துக் கல்லூரி, மானிப்பாய்)

## கேள்விகளும் விடைகளும்

1. வான வெளியில் செயற்கைக் கிரகத்தைச் செலுத்த முடியும் எனக் கண்டு பிடித்துக் கூறியவர் யார்?

—சேர் ஐசக் நியூட்டன்

2. தன் சட்டைப் பையில் எப்போதும் ஆந்தையை வைத்துக் கொண்டிருந்த புகழ் பெற்ற பெண்மணி யார்?

— பிளாரன்ஸ் நைட்டிங்கேல்

3. முதன் முதலில் முகத்தைச் சுத்தமாக க்ஷவரம் செய்துகொண்டவர் என வரலாற்றில் புகழ் பெற்றவர் யார்?

—அலெக்சாண்டர்

தொகுப்பு: இ. லதா

## ● கண்ணுடி ●

-இ. ஸ்ரீ-

என் முகத்தை அப்படியே
எனக்குக் காட்டுமாம்
உன் முகத்தை அப்படியே
உனக்கும் காட்டுமாம்
பளிச் என்று இருந்திட்டால்
பளிங்கு போலவே
படக் என்று தெரியுமே
மனம் போலவே
என்னடி நீ முழிக்கிறுய்
இன்னும் புரியவில்லையா
கண்ணுடி தன் கேளடி
கன்னத்தை அதிற் பாரடி

## சரளமாகப் பேசும் ஏழைக் குழந்தைகள்

பணக்கார வீட்டுக் குழந்தைகளைவிட ஏழை வீட்டுக் குழந்தைகள் சரளமாகப் பேசுகிருர்கள். அதிக வார்த்தைகளையும் பேச்சில் பயன்படுத்துகிருர்கள்.

அமெரிக்காவில் நடந்த ஒரு சோதனையில் இருந்து இது தெரிய வருகிறது

இந்தச் சோதனையில் 2,50,000 சிறுவர் சிறுமிகள் கலந்து கொண்டார்கள்

இவர்கள் பள்ளிக்கூடத்தில் படிப்பவர்கள் ஏழை நடுத்தர பணக்காரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இவர்களைப் பேசச் சொல்லி நிபுணர்கள் கவனித்தார்கள். அப்பொழுதான் ஏழைக் குழந்தைகள் தெளிவாகப் பேசுவதை அவர்கள் கண்டுபிடித்தார்கள்.

இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன ஏழை வீட்டுக் குழந்தைகள் தங்கள் தேவைகளைத் தாங்களே கேட்டுப் பெறுகிருர்கள். மற்றக் குழந்தைகளுடன் பழகுகிருர்கள் எங்கு வேண்டுமானுலும் ஊர் சுற்றுகிருர்கள்.

பணக்காரக் குழந்தைகளோ பங்களாவில் தனித்து வாழ்கின்றன அவர்களின் தேவையறிந்து வேலை செய்ய ஆட்கள் காத்துக் கொண்டு இருக்கிருர்கள். தங்களுக்குத் தேவையான விவரங்களைப் படித்தும் பார்த்தும் அறிந்து கொள்கிருர்கள். வெளியில் அதிகம் செல்வதும் இல்லை ஆகவே அவர்களுக்குப் பேசிப் பழக அதிக வாய்ப்புக் கிடைப்பதும் இல்லை

ஆதாரம்: சுமங்கலி

## ஆண்டவனை அடைய...

'அம்மா! எனக்குப் பசி வந்தவுடனே எழுப்பி விடு' என்கிறது குழந்தை.

'பசி வந்தால் அதுவே உன்னை எழுப்பி விடும்' என்கிருள் தாய்

அதேபோல அண்டவனை அடைய வேண்டும் என்ற பசி ஏற்பட்டால் யாரும் தட்டி எழுப்ப வேண்டியதில்லை.

வழியும் காட்ட வேண்டியதில்லை.

## விடுகதை விடுவோமா?

1 வாடா போடா என்பான் ஆழக் குழியிலிருப்பான்-
அவன் யார்?

2 வேட்டையாடுவான் ஆனுல் தின்ன மாட்டான்
அது என்ன?

3 கன்னி இவளைத் தொட்டால் கண்ணீர் வடிக்க வேண்டும்-
அது என்ன?

4 கன்னங் கறுப்பழகி காலமெல்லாம் கரைந்திடுவாள்-
அவள் யார்?

5 பந்து நிறைய பவழ ராணிகள்-
அது என்ன?

6 காட்டிலே பச்சை சடையிலே கறுப்பு வீட்டிலே சிவப்பு-
அது என்ன?

7. வளர்ந்து வளர்ந்து தேயுது வானத்தில் மிதக்குது-
அது என்ன?

8- வெடிக்கும் சத்தம் கேட்காது வெண்மையில் அதைப் போல் எதுவுமில்லை-
அது என்ன?

### விடைகள்

1. நாக்கு
2. துப்பாக்கி
3. வெங்காயம்
4. காகம்
5 மாதுளம்பழம்
6. விறகு
7. நிலா
8. பருத்தி

வை விநாயகதாஸ்
(பரந்தன், இந்து மகாவித்தியாலயம்)

# தாயின் பண்பு நலன்களே சேயின் சிறப்பு வாழ்வாகிறது

மனித வாழ்க்கையில் பெறுவதற்கரிதான செல்வங்கள் எத்தனையோ உள்ளன அவை யாவும் பொருள் என்றுதான் கூறப்படுகின்றன. ஆனுலும் 'தம்பொருளென்று உரிமையோடு கூறக்கூடியது மழலைச் செல்வமேயாகும். இத்தன்மையான மழலைச் செல்வங்களை போற்றி வளர்ப்பதில் பெரும் பங்கு வகிப்பவள் தாய்தான் எல்லாக் குழந்தைகளும் பிறப்பில் நல்லவர்களாகத் தான் பிறக்கின்றனர். வளர்க்கப்படும்சூழலைப்பொறுத்தே பின்னர் அவர்களுடைய வாழ்க்கை அமைகின்றது. ஒவ்வோர் குழந்தையிடமும் தெய்வாம்சமான நல்ல பண்புகள் மறைந்து கிடக்கின்றன. பட்டை தீட்டப்பட்டதும் மாணிக்கக்கல் பிரகாசிப்பது போன்று தாயானவள் என்ன வழியில் குழந்தைகளை இட்டுச் செல்

அதனுலேயே குழந்தைகளின் பால்ய லீலைகளான ஒவ்வோர் குறும்புச் செயல்களும் அவர்களுக்கு பெருந் தொல்லைகளாகி விடுகின்றன. ஆனுல் இதுவேர் இன்பத் தொல்லைதானென்

பெண்களிற் பெரும்பாலோர் தொழிலிற்கு செல்பவர்கள் ஆயிற்றே, மற்றும் கெடுபிடிகள் நிறைந்த இன்றைய சூழ்நிலையில் வாழ்ந்து வரும் குழந்தைகள் கல்வியில் அக்கறை செலுத்துவ

### பாச உணர்வு பரிமளிக்கும் பாங்கு பக்திப் பாசுரங்களிலும் மிளிர்கிறது

கின்றுளோ அதற்கேற்ப அவர்களும் மாறிக்கொள்கின்றனர்

இன்றைய இருபதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வாழ்ந்து வரும் பெண்கள் குழந்தைகளை சொத்துக்களாக கருதாது சுமைகளாக எண்ணி வருகின்றனர்

பதை அவர்கள் உணருவதில்லை

குரல் இனிது யாழ் இனிது என்ப தம் மக்கள் மழலைச் சொல்கேளாதவர்...... என்ற வள்ளுவர் மணிவாக்கிற்கு இன்றைய தாய்க்குலம் சாவு மணி அடித்து விட்டது ஏனெனில் இன்றைய

தில்லை. சிறுவர்கள் நெஞ்சிலும் நாடடுப் பிரச்சினைகள் பற்றிய எண்ணமே ஊற்றெடுத்து நிற்கின்றது இதுவும் உளவியல்


தி. க

ரீதியான தாக்கமாகும்.

சூழ்நிலைக்கேற்றவாறு கல்வி புகட்டும் முறைகளை பெற்ருேரும் ஆசிரியர்களும் தெரிந்து கொள்ள வேண்டும்

குழந்தைகளை வளர்க்கும்போது அவர்களுக்காக பெறருேர் எத்தனையோ தியாகங்களையும்

( 6ஆம் பக்கம் பார்க்க)



## பெற்றோரே கவனம்

பெற்ருேர்கள் தங்கள் குழந்தைகளை இரவில் சீக்கிரமாகவோ அல்லது அவர்கள் தூங்குவதற்கு விருப்பமில்லாத பொழுதோ பலவந்தமாகத் தூங்க வைக்கக்கூடாது

அதை அவர்கள் ஒரு தண்டனையாகவே கருதுகின்றனர். தவிர நாளடைவில் 'படுக்கை அறை என்ருலே ஒருவகை வெறுப்பு அவர்கள் மனதில் அவர்களை அறியாமலே ஏற்பட்டுவிடும்.

இப்படிப் பிரிட்டனில் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## தேனில் இருக்கிறது தேவையான சத்து

ஒரு தேக்கரண்டி தேனில் ஒரு முட்டையின் சத்து இருக்கிறது.

முட்டையைச் சாப்பிட விரும்பாதவர்கள் தினமும் ஒரு தேக்கரண்டி தேன் பருகலாம்

## தயாரித்து ருசியுங்கள்

அரைநெல்லி ஊறுகாய்

தேவையான பொருள்கள்:- கொட்டை நீக்கிய அரைநெல்லி 1 கப் காரப்பொடி 4 தேக்கரண்டி உப்பு தேவையான அளவு மஞ்சள் பொடி, வெந்தயம், கடுகு எண்ணெய்

செய்முறை:- முதலில் வெந்தயத்தை வறுத்து பொடியாக்கி வைத்துக் கொள்ளவும் ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய் இட்டு அது கொதித்ததும், அதில் கடுகைத் தாளித்து அரைநெல்லித் துண்டங்களைப் போட்டு அதன்மேல் மஞ்சள்ப் பொடி, பொடியாக்கப்பட்ட உப்பு ஆகியவற்றைப் போட்டு கிளறி மூடி வைக்கவும். நன்ருக வெந்ததும் காரமிளகாய்ப் பொடியையும், பொடிசெய்து வைத்திருக்கும் வெந்தயம், இவற்றையும் போட்டு நனருக வெந்ததும் இன்னும் எண்ணெய்விட்டு எடுத்து வைக்கவும். இவற்றுடன் பச்சைமிளகாயும் சேர்க்கலாம்.

அரைநெல்லி ஜாம்

தேவையான பொருள்கள்:- அரைநெல்லி 2 கப் சீனி 1 கப் கலரிங்(சிவப்பு சிறந்தது)

செய்முறை ; அரைநெல்லியை ஒரு பாத்திரத்தில் போட்டு சிறிது நீரும் விட்டு அவிக்கவும். நன்கு நீரில்லாமல் அவிந்ததும் ஆறவைத்து பிசைந்து கொட்டைகளை அகற்றி விட வேண்டும். கொட்டைகள் அகற்றப்பட்ட துவையலைத் திரும்பவும் நன்கு பிசைந்து பருபருக்கை இல்லாது செய்யவேண்டும். பின்னர் அவற்றுடன் சீனியையும் கலந்து திரும்பவும் அடுப்பில் வைத்து காய்ச்சவேண்டும். அப்போது அக்கலவை இறுகி ஜாம் பதத்திற்கு வரும். உடன் கலரிங்கையும் கலந்து சூட்டுடன் ஒரு போத்தலில் இட்டு வாய்ப்பகுதியை மூடாது ஆறவிடவேண்டும்

உமா சண்முகராஜா

## நாய் கடிக்கு நல்ல மருந்து

நாய் கடித்து விட்டதா?

மணத்தக்காளி இலைகளை நன்ருகக் கடிவாயில் சாறுபிழிந்து சக்கையையும் மேலே ஒட்டும்படி வைத்து விடுங்கள்!

...... குணமாகிவிடும்.

## ஒரு முறைப்பாடு

ஆசிரியருக்கு;

9-8-86 ஆம் திகதிய சஞ்சீவி மலரைப் படித்தேன். படித்தபோது என்னை ஆச்சரியத்திலாழ்த்திய விடயமொன்று அதில் பிரசுரமாகியிருந்தது.

'ஒரு பெண்ணுகப் பிறந்து விட்டால்' என்ற தலைப்பில் என்னுல் எழுதப்பட்ட கவிதை பிரபாலினி என்ற பிறிதொருவரின் பெயரில் வந்திருந்ததே அந்த ஆச்சரியத்துக்குக் காரணமாகும்.

யாழ் ரோட்டறிக் கழகத்தினரால் வெளியிடப்பட்டுள்ள 'ஓ சமுதாயமே' என்னும் எனது கவிதைத் தொகுப்பில் நான் எழுதிய அந்தக் கவிதை இருக்கிறது

சில சிறுமாற்றங்களுடன் பிரபாலினி அந்தக் கவிதையை மாற்றி எழுதியுள்ளார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மங்களராணி
சுப்பிரமணியம்

# இன்னும் கொஞ்சம் முன்னரே திருமணம் செய்திருக்கலாமே?

### பாண்டியராஜனின் ஏக்கம்

திருமணம் நிச்சயமானபோது, இவ்வளவு சீக்கிரம் திருமணம் செய்து கொள்கிருேமே என்று நினைத்தேன். ஆனுல் திருமணத்துக்குப் பிறகு இன்னும் கொஞ்சம் முன்னரே திருமணம் செய்திருக்கலாமே என்று தோன்றுகிறது.

இப்படி ஏக்கத்துடன் கூறுகிருர் பாண்டியராஜன்.

அவர் மேலும் கூறுகையில்,

முன்பு என் மீது அன்பு செலுத்தவும், ஆறுதல் கூறவும் அம்மா மட்டும் இருந்தார் இப்பொழுது என் மனைவியும் சேர்ந்து கொண்டு விட்டாள்.

மனைவியின் விருந்து

நண்பர்களின் திருமண விருந்து இன்னும் முடியவில்லை. அதற்குள் என் மனைவி, பெரு மகிழ்ச்சி விருந்தை எனக்குப் படைத்து விட்டாள்.

ஆம் நான் அப்பா ஆகப் போகிறேன். என் மனைவி நாலு மாத கர்ப்பமாக இருக்கிருள்

அப்பா ஆகப் போகிறேன் என்ற செய்தி மகிழ்ச்சியை அளித்தாலும், கூடவே பயமும் ஏற்படுகிறது எனக்கு மனைவி, குழந்தை என்று குடும்பப் பொறுப்பு அதிகமாகிக் கொண்டு போகிறதே!

முன்பு யாரைப் பற்றியும் கவலைப்படாமல் பேசுவேன்; சிரிப்பேன் காதல் காட்சிகளில் புகுந்து விளையாடுவேன். ஆனுல் இப்பொழுது பெண்டாட்டிக்குப் பயந்து நடக்க வேண்டியிருக்கிறது' என்ருர்.

### கல்பனுவின் புது முயற்சி

'சின்னவீடு' படத்தின் மூலம் பிரபல்யமானவர் கல்பனு. இவர் நடிகை ஊர்வசியின் சகோதரி.

தனது பருமனுன உடம்பை குறைப்பதற்கு என்னவோ எல்லாம் செய்து பார்த்தார்

ஒரு துளி அளவும் குறையவில்லை அவரது உடம்பு.

இப்பொழுது தினமும் வீட்டிற்குள்ளேயே சைக்கிள் ஓட்டுகிருர்.

இந்தப் புது முயற்சி எப்படி முடியுமோ?

## ● திரை உலகில் ●


நடிகை ஸ்ரீதேவி விரைவில் ஒரு மினித் தியேட்டருக்கு அதிபதியாகப் போகிருர் டி. நகரில் கட்டுமான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன

* * *

கமலஹாசன் ஒரு படத்தை இயக்கப் போகிருராம். பாலகுமாரனின் கதைக்கு திரைக்கதை, டைரக்ஷன் பொறுப்பை ஏற்க இருப்பவரும் கமலஹாசனே!

* * *

பிரபல தயாரிப்பாளர் கே. ஆர். தமிழில் ஒரு படத்தை டைரக்ட் செய்யவிருக்கிருர். மதிஒளி சண்முகம் இப்படத்திற்கு வசனம் எழுதுகிருர்.






## ராதிகா கலகலப்பாக இல்லை, அது ஏன்?

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ராதிகாவின் வாழ்க்கையில் ஏற்பட்ட சில கசப்பான சம்பவங்களைத் தொடர்ந்து அவர் மிகவும் சோகமான நிலையில் காணப்பட்டார்.

பின்னர் அவற்றை எல்லாம் மறந்து விட்டாற்போல், மீண்டும் முழு மூச்சாக நடிக்கத் தொடங்கினுர். அவருக்கு அதிஷ்டமும் கைகொடுத்தது.

தமிழ்த் திரையுலகில் பிரகாசிக்கத் தொடங்கி விட்ட அவர், இந்திப் படவுலகில் நுழைந்தார்

அங்கு அவருக்கு அதிஷ்டம் கைகொடுக்கவில்லை அவர் நடித்த படங்கள் தோல்வி கண்டன பழைய நிலைக்கே ராதிகா திரும்பி விட்டார்.

ராதிகா இப்பொழுது பொது நிகழ்ச்சிகளில் அதிகம் கலந்து கொள்வதில்லை. கலகலப்பற்ற நிலையில் காணப்படுகிருர்.

## விரைவில் வருவான் இலங்கேஸ்வரன்

நீண்ட காலத்திற்குப் பின்னர் இயக்குனர் ராமண்ணு புராணக் கதை ஒன்றை திரைப்படமாகத் தரத் தயாராகிக் கொண்டிருக்கிருர்.

தமிழகம் முழுவதும் பேசப்பட்ட சிறந்த நாடக இலக்கியமான இலங்கேஸ்வரனே திரைப்படமாகப் போகிறது

இலங்கேஸ்வரன் - தமிழின் மீதும்; இசையின் மீதும்; குறிப்பாகத் தன் மனைவிமீதும்; தன் உடன் பிறப்புகளின் மீதும் பாசமும் நேசமும் கொண்டிருந்தவன்

இவன் மகள் தான் சீதை. இந்த சீதையைச் சிறைப்படுத்திக்கொண்டு வந்த காரணம்-ராமனைத் தன் தேசத்துக்கு அழைத்து வர வேண்டும் என்பதற்காகத் தான்.

விதி எழுதிய விபரீதங்கள் இலங்கேஸ்வரனின் பார்வையில் பல விகல்பங்களைத் தோற்றுவித்து விட்டன.

இதுதான் இந்த இலங்கேஸ்வரனைப் பற்றிய காவிய ஆய்வு.

படத்திற்கான நட்சத்திரத் தேர்வு நடைபெறுகிறது.

விரைவில் இலங்கேஸ்வரன் வரப் போகிருன்

★ தயாரிப்பு: பேரின்பம் ★

## சாந்தியின் 'மூட் அவுட்'

படப்பிடிப்பில் ஆடிக் கொண்டிருக்கும்போது 'மூட் அவுட்' ஆகிவிடுகிருர் டிஸ்கோ சாந்தி.

திடீர் திடீரென்று அவர் வயிற்றுவலி, தலைவலி என்று படப்பிடிப்பில் இருந்து இடைநடுவிலும் போய்விடுகிருர்.

இந்த 'மூட்' அவுட்டிற்குக் காரணம், அவரின் தாயார், சாந்தியின் காதல் விவகாரத்தில் அதிகம் தலையிடுவதும், அவரை கூண்டுக்கிளியைப்போல வைத்திருப்பதும்தானும்.

டிஸ்கோ சாந்தியின் நடிப்புலக வாழ்வில் திடீர் மாற்றம் நிகழலாம் என்று அவரின் தாயார் நினைப்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக டிஸ்கோவின் தங்கையை நடிகையாக்கி இருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை நினைவுகளில் கிழக்கும் மேற்கும்

வில்லியம் வோர்ட்ஸ் வோர்த் (William Words worth) (கி.பி 1770—1850) ஓர் தலை சிறந்த ஆங்கிலக் கவிஞன் இயற்கையை வர்ணித்துப் பாடுவதில் இவருக்கு நிகர் இவரே "இயற்கை என்பது ஒழுக்கம் மிக்கது. ஒழுங்கீனங்கள் யாவும் சேர்க்கையே'' என்ற கொள்கையுடையவர். (Moral life is natural and immoral life is an acquired one) மரணம் என்பது இயற்கையானது. அதில் பிரிவு இல்லை என்ற உண்மையை தாம் எழுதிய "யாம் எழுவோம்'' (We are seven) என்ற கவிதையில் ஒரு சிறுமி மூலம் அதுவும் இயற்கையான கிராமப் புறச்சூழலில் வாழும் சிறுமி மூலம் உணர்த்துகிறார்.

கவிதையின் கருத்தை மேலோட்டமாகப் பார்க்கலாம் அழகிய எட்டு வயது கிராமப்புற சிறுமியைப் புலவர் சந்திக்கிறார். அவளது அற்புத அழகு அவரை அவளுடன் உரையாட வைக்கிறது. "தங்கச்சி உனக்குச் சகோதரர்கள் உண்டோ?'' என்று குசலம் விசாரிக்கிறார். "அப்பா அம்மாவுக்கு நாங்கள் ஏழு பிள்ளைகள் இருவர் 'சோண்வேல்ஸ்' என்ற கிராமத்தில் வசிக்கிறார்கள். இருவர் மாலுமிகளாகத் தொழில் நிமித்தம் வெளியூரில் இருக்கிறார்கள். இருவர் அமைதியாக ஆனந்தமாகச் சேமக்காலையில் துயில்கிறார்கள் என்னுடன் சேர்த்து ஏழு பேர்கள் சரிதானே ஐயா'' என்கிறாள்

'நீ ஓடியாடி விளையாடுகிறாய் உன் கை கால்களில் உயிரோட்டம் உண்டு உன் மற்றைய சகோதரர்களும் அப்படியே. ஆனால் இருவர் சேமக்காலையில் ஆனந்தமாகத் துயில்கிறார்கள் என்கிறாய் அவர்களால் ஓடியாட முடியுமா? எனவே ஏழில் இரண்டு போனால் ஐந்து தானே'' என்கிறார் புலவர்.

அவளோ, "என் சகோதரர்கள் இருவரும் அருகருகே அமைதியாகச் சேமக்காலையில் துயில்கிறார்கள் நான் அச்சமாதியின் அருகிலே அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வேன் அவர்கள் அருகில் இருந்து எனது காலுறைகளைப் பின்னுவேன் அவர்களுடன் விளையாடுகிறேன் அவர் கள் சொர்க்கத்தில் இருந்தாலும் எங்கும் போய் விடவில்லையே இருக்கிறார்கள் தானே, என்னைப் பொறுத்தவரையில் சோண்வேலில் இருப்பவர்களும், மாலுமிகளாக இருப்பவர்களும் என் அருகில் இல்லாவிட்டாலும் இருக்கிறார்கள் தானே. ஆகவே நாம் ஏழுபேரே'' என்கிறாள். புலவர் வாயடைத்து நிற்கிறார்

இதே கருத்துடைய "யாம் ஐவேம்'' என்ற பாடலை அதி வண.

## இரு கவிஞர்களையும் பதில் கூறி மடக்கும் எட்டு வயதுச் சிறுமிகள்

பிரான்ஸில் கிங்ஸ்பரி அடிகளார் அவர்கள் பாமயிருக்கிறார் இவர் காலம் (கி பி. 1873—1941). தமிழ் வளர்த்த சான்றோர்களில் ஒருவரான ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களது மகனார் இவர். இவரது இயற் பெயர் அழகசுந்தரதேசிகர் என்பது. இலங்கைப் பல்கலைக் கழகக் கலாசாலையிலே தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர் இவரது பாடலைப் பார்ப்போம்.

புலவர் அவர்கள் காங்கேயன்துறையில் இருந்து திரிமலைக்குப் போகும் வழியில் எட்டு வயதுக் கிராமப்புறச் சிறுமி ஒருத்தியைச் சந்திக்கிறார் கிராமப்புற அழகு அவளில் மிளிர்கிறது. அவள் அழகு புலவரைப் பேச வைக்கிறது தங்கச்சி உன் பெயர் என்ன? அப்பா அம்மா உண்டோ சகோதரர்கள் உண்டோ? என்று விசாரிக்கிறார். சிறுமி கொஞ்சம் துடுக்கானவள் வெடுக்கெனப் பதில் கூறுகிறாள். அப்பு ஆச்சிக்கு நாங்கள் ஐந்து பேர் ஓர் அண்ணர் கொழும்பில் இருக்கிறார், ஓர் அக்கா இரங்கூனில் இருக்கிறார். ஓவியத்தில் எழுத முடியாத அழகுடைய கற்பகம் என்னும் பெயருடைய எனது தங்கை போன புரட்டாதி மாதம் எங்கள் நடராஜரின் அழகிய பாதங்களை அடைந்து அதுவே ஆனந்தம் என்று கருதி அங்கிருந்து சுகிக்கிறாள். எனது தம்பி சிதம்பரநாதன் இப்போது தான் தவழ்கின்றான். எனவே நாங்கள் ஐந்து பேர் என்கிறாள்.

புலவர் அவள் வாயைக் கிளறுகிறார். 'உன் தங்கை கற்பகம் நடராஜர் பதம் அடைந்து

உதங்கா

விட்டால் ஐந்தில் ஒன்று போனால் நாலுதானே' என்கிறார். அவளோ, கொழும்புக்குப் போன அண்ணர் திரும்பிவரா விட்டால் அவர் இல்லை யென்ற கருத்தோ? இரங்கூனில் இருக்கும் அக்கா திரும்பிவரா விட்டால் அவர் இல்லை யென்ற கருத்தோ?' அவர்கள் இருவரையும் கழித்துவிட்டால் பின்னர் இருவர் என்று சொல்லுவீர்கள் போலும்' என்று புலவரை மடக்குகிறாள்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# குண்டர்தம் கொடுமை; கடிகிறார் திருநாவுக்கரசர்

இன்று நம்மிற்பலர் குண்டர் என்ற சொல்லைத் தினத்தாள்களிலும் பேச்சிலும் பரிச்சயமாக்கிக் கொண்டோம். தமிழ்மக்கள் மீது குண்டர்கள் கொடூரம் என ஏடுகள் எழுதுகின்றன கறுப்புச்சட்டை குண்டர்கள், வார்காவற் படைக் குண்டர்கள் என அடிக்கடி படிக்கிறோம். இவர்கள் ஈவிரக்கமற்ற கொலைக்கு உடந்தையாக இன்று இருக்கிறார்கள்.

அக்காலத்திலும் குண்டர்கள் இருந்திருக்கிறார்கள். திருநாவுக்கரசு நாயனார் பாடிய திருத் தாண்டகத்தில் 6ஆவது பாடலில் குண்டர் யார்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைத் தெட்டத் தெளிவாக விளக்கியுள்ளார்.

திருநாவுக்கரசு நாயனார் சைவ சமயத்தையும், சமண சமயத்தையும் வேறுபட்ட கால இடைவெளியில் கைக்கொண்டவர். இரு சமயங்களின் நோக்கங்களும் ஒன்றுக்கொன்று எதிர் மாறானவை என்று அந் நாயனார் கூறியருளுவதால் நாம் நன்கு தெரிந்து கொள்ளலாம். சூலைநோய் வந்து வருந்திய போது தம் கொள்கையை நெகிழவிடுத் திலகவதியார் ஆகிய தமக்கையாரின் கொள்கையைக் கைக்கொண்டு கடவுளை வழிபடத் தொடங்கியபின் அவருக்கிருந்த நன்மையை நாம் நன்கு அறிவோம்.

பொய் வாழ்வையும் மெய்வாழ்வையும் தாமும் அறிந்து ஈடேற நாயனார் பல தேவாரங்களிற் கூறியுள்ளார். அவற்றில் ஒன்றைப் பாருங்கள் 'சினந்திருத்துஞ் சிறுபெறியார் குண்டர் தங்கள் செதுமதியார்

ந. சி.

திவினைகளே விழுந்தேன் தேடிப் புனந்திருத்தும் பொல்லாத பிண்டி பேணும் பொறியிலியேன தன்னைப் பொருளா வாண்டுக் கொண்டு, தனந்திருத்துமவர் திறத்தையொழியப் பாற்றித் தயாமூலதன்மவழி யெனக்கு நல்கி, மனந்திருத்துமழபாடி வயிரத் தூணேயென்றென்றே நானரற்றி நைகின்றேனே' என்பது ஒரு திருத்தாண்டகம்.

இப்பாட்டிலே குண்டர்கள் என்ற சொல் குறிப்பிடப்படுகின்றது. குண்டராக இங்கு தெரிவிக்கப்பட்டவர் சமண சந்நியாசிகள் ஆவர். அவர் தமக்கு மாறாய் நிற்பவரை அன்பினால் வெல்லமாட்டார். அவருக்குக் கோபம் அதிகரிப்பதிலலே பிறர் அஞ்சி அவருக்கு மாறாய் நில்லா தொழிதலை அவர் பல முறை கண்டு, எடுத்ததெல்லாவற்றிற்கும் சினத்தையே பெரிய ஆயுதமாகக் கருதும் சிறியராவார் எனினும் அரசனைச் சார்ந்து அவனுடைய செல்வாக்கை பெற்றும் தம் சமயத்தைப் பரப்பும் அவருக் கஞ்சி மறு சமயத்தவர் ஒழுகலாலே அவர் தம்மைப் பெரியார் எனக் கருதிக் கொள்வர்.

அரசமரம் பருத்து ஓங்கி வளரும்போது எவ்வளவோ நிலத்தைப் பிடித்துவிடும். ஏனைய மரங்கள் நிழலைமாத்திரமன்றி உணவும் தருவன. இப்படியான மரத்தை வளர்ப்பதை விட்டு அரசமரமே பெரு நன்மை செய்யுமென அம்மரத்தைப் பல இடங்களில் உண்டாக்கிப் பூமிகாடாகுமேயன்றி நாடாகாது நாடு திருத்துவதில் ஈடுபடாது காடு (புனம்) திருத்துவதிலே ஈடுபட்

(6ஆம் பக்கம் பார்க்க)

# காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

தேவப்பிரியன் அசோகன்

(இறுதிப் பகுதி)

அசோகருடைய ஜீவ காருண்யம் ஆறறிவுடைய மக்களையன்றி ஐயறிவுபடைத்த விலங்கு முதலியவைகளையும் தழுவி நின்றது.

மிருகங்களுக்கு நோய் வந்தால் அவைகட்கு வைத்தியம் செய்வதற்குத் தனியாக மிருக வைத்தியசாலைகள் ஏற்படுத்தப்பட்டன.

மிருகங்களை பலியிடுவது தடுக்கப்பட்டது.

இந்த இரு விடயங்களிலும் அவர் நம் காலத்தைவிட அதிகம் முன்னேறிச் சென்றார் என்றே சொல்ல வேண்டும் துரதிஷ்டவசமாக மிருகங்களைப் பலி கொடுக்கும் வழக்கம் இன்றும் ஓரளவுக்கு இருந்து வருகின்றது அது மதத்தின் ஒரு பகுதியாகவும் கருதப்பட்டு வருகிறது மிருகங்களின் சிகிச்சைக்குப் போதிய ஏற்பாடுகள் தற்போது செய்யப்பட்டிருக்கின்றன என்று யாரும் சொல்லமுடியாது.

பௌத்த மதம் பரவியதாலும் அசோகரின் ஒழுக்கம் காரணமாகவும் பலர் சைவ உணவு கொள்ள ஆரம்பித்தார்கள். அதுவரையும் இந்தியாவில் சைத்திரியர்களும் பிராமணர்களும் பொதுவாக மாமிசம் உண்டும் மது அருந்தியும் வந்தார்கள் இந்தப் பழக்கம் மிகவும் குறைய ஆரம்பித்தது

இவ்வாறு 38 ஆண்டுகள் அசோகர் அரசாண்டார் பொது நன்மையை அன்பு முறையிலேயே வளர்க்க அவர் எப்போதும் முயன்று வந்தார்.

## நேருவிடமிருந்து இந்திராவுக்கு

பொதுக்காரியங்களைக்கவனிக்க அவர் எக்காலத்திற்கும் தயாராக இருந்தார்.

"நான் உண்ணுகின்றேன் என்றும், உறங்குகின்றேன் என்றும் பாராமல், மந்திராலோசனை மண்டபத்தில் இருக்கின்றேன் என்றும் பாராமல் எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் எனக்கு ஜனங்களின் காரியத்தை அறிவித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

நான் பொது நன்மைக்காக எப்போதும் உழைக்கக் கடமைப்பட்டிருப்பதால் ஏதாவது சிக்கல் ஏற்படும் காலத்து, இன்ன சமயம் இன்னநேரம் என்று பாராமல் உடனே எனக்குத் தெரிவிக்க வேண்டியது'' என்று அவர் சொல்லியிருக்கிறார்.

கி. மு. 226 ஆம் ஆண்டில் அசோகர் இவ்வுலக வாழ்வை நீத்தார். அதற்கு சில காலத்துக்கு முன்பு அவர் பௌத்த பிக்ஷு ஆனார் என்று தெரிகிறது.

மௌரிய காலத்துப் பொருள்களிலே எஞ்சி நின்றவை மிகவும் சிலவே ஆனால் நமக்கு இப்போது கிடைத்திருப்பவை இந்தியாவில் ஆரிய நாகரிகத்தின் மிகவும் தொன்மையான பகுதியைக் குறிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

பயிற்சி பெற்ற ஆசிரியரானமை

இலங்கைக் கல்வி வரலாற்றிலே ஒரு கால கட்டத்தில் பயிற்றப் பெற்ற ஆசிரியர்களுக்கே சிறப்பான முதலிடம் அளிக்கப் பெற்றது. அந்த வகையில் பெரிய பட்டதாரிகள் பலரும் கொழும்பிலமைந்த ஆங்கிலப் பயிற்சிக்கலாசாலையை நாடிப் பட்டத்தின் பின் பயிற்சி பெற்றவர் கி 'போஸ்ற் கிராட்யுவேற் ற்றெயிண்ட்' என்னும் பயிற்சி விசேடம் பெற்றவராய் மதிப்புப் பெற்றார்கள். இந்த வகையில் எம்மவருள் முன்னோடியாக இருந்தவர் மயிலிட்டி சுவாமிநாதன் அவர்கள்.

தமிழ் வித்துவானாகி வந்த ந சுப்பையா அவர்களும் கோப்பாயில் ஆசிரியர்க்கான பயிற்சி பெற்றவரேயாவார் தமிழாசிரியர்களுக்கான பயிற்சியளிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் ஏழு பயிற்சிக் கலாசாலைகள் இருந்தன. பயிற்சி பெறுமலே ஆசிரியர்க்கான தராதரப் பத்திரம் பெற்றவர்களும் தங்கள் தராதரம் போதாதெனக் கருதிப் பயிற்சி பெற்றுயர்ந்தார்கள். இதை நகைச்சுவையாகக் கூறின் சிவப்பு நிறச் சான்றுப் பத்திரத்தைக் கறுப்பு நிறச்சான்றுப் பத்திரமாக்கியவர்கள் ஆசிரிய தராதரப் பத்திரம் சிவப்பு நிற மட்டையைக் கொண்டது. பயிற்றப் பெற்ற

## ஆசிரிய கலாசாலைப் புகுமுகத் தேர்வுக்கான தமிழ்மொழி அறிவு அளவுக்கு அதிகமிருந்தது

ஆசிரியர்களின் சான்றிதழ் மட்டை கறுப்பு நிறங் கொண்டது

ஆசிரியர்க்கான பயிற்சிக்கு ஒரு காலத்தில் எட்டாம் வகுப்புச் சித்தி போதுமானதாயினும் அவர்கள் புகுநிலைத் தேர்வில் திறமை காட்ட வேண்டியவராயிருந்தனர் புகுமுறைத் தேர்வோடு நேர்முகத் தேர்வும் பிரதானமாயிருந்தது பண்டிதமணி அவர்களுக்கு நேர்முகத் தேர்வுக்குப் பெரிதும் உதவக் கூடியதான ஒரு நன்னடத்தைப் பத்திரத்தை நாவலர் பாடசாலை மனேச்சர் அவர்கள் எழுதிக் கொடுத்திருந்தார்கள். அதில் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை நாவலர் காவிய பாடசாலையில் நவம்பர் 1917 முதல் ஏப்ரல் 1926 வரை தமிழும் சமஸ்கிருதமும் பயின்று, இறுதிப் பரீட்சையில் திறமை காட்டி சித்தியடைந்தவர் என்னும் கருத்தில் எழுதிக் கொடுத்திருந்தார். ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற அந்த நன்னடத்தைப் பத்திரத்தை மூலத்திலிருந்தவாறு படித்தறியலாம்

This is to certify that S. Kanapathipillai haveing gone through a course of studies in Tamil and sanskrit at the Navalar classical school, Jaffna from November 19 7 to April 1926, passed the final examination of the school very creditably.

T. Kailasapillai
manager
Saivapirakasa
Vidyasalai
Jaffna 30th July 1926.

பண்டிதமணி அவர்களை ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெறுமாறு பணித்தவர் அவரின் பழைய நண்பரும் உறவினரும் வழி காட்டியுமான மட்டுவில் வேற்பிள்ளை நடராசா அவர்களேயாவர். பண்டிதமணி அவர்களுக்கு ஆசிரிய கலாசாலைப் புகுமுகத் தேர்வுக்கான

★ க. சி. குலரத்தினம் ★

தமிழ் மொழியறிவு அளவுக்கு மிஞ்சியிருந்தது ஆனால் அடுத்த பாடமாய கணிதம் அவருக்குத் தடையாயிருந்தது அவர் முன்னர் 1910 ஆம் ஆண்டளவில் ஐந்தாம் வகுப்பிற் படித்த தசமதானம், பின்னம் முதலியனவே அவரின் நினைவைவிட்டு அகன்றுவிட்டன. அவர் நாவலர் காவிய பாடசாலையிற் படித்த காலத்தில் அங்கே சைவப்பிரகாச வித்தியாசாலையிலே ஏழாம் எட்டாம் வகுப்பு மாணாக்கர்கள் கவுரிசங்கர், வேக்மன், ஹோல் அன்ஸ்ரீவன்ஸ் முதலானவர்களின் கணிதப் புத்தகங்களிலிருந்து கடுமையான கணக்குகளைக் கண் மூடி விழிப்பதன் முன் செய்து முடிப்பதைக் கண்டிருக்கிறார்.

தமக்குக் கணிதபாடஞ் சொல்லித் தரவல்ல, கணக்கு வரச் செய்யத்தக்க ஆசான் ஒருவரை எங்கே தேடுவது என்று ஆவலுடனிருந்த வேளையில், ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடத்துத் தலைமையாசிரியரைக் கண்டார் தலைமையாசிரியரின் திட்டம் நீண்டகால அடிப்படையிலமைவதாயிற்று. முதல் வருடத்தில் ஆறும் வகுப்புக்குரிய கணித பாடத்திட்டம். இரண்டாம் வருடத்தில் ஏழாம் வகுப்புக்குரிய திட்டம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மேன்மைமிகு இந்திய நுண்கலைகளை மேலைநாட்டுக்கு அறிவித்த மேதை

இந்தியக் கலைகளின் சிறப்பியல்புகளை அகில உலக அறிஞர் பெருமக்கள் அறியவகை செய்தவர் ஆனந்தக்குமாரசாமி அவர்கள் என்றால் மிகையாகாது. இந்தியக் கலைகளின் மறுமலர்ச்சிக்கு அறிஞர் ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் ஆற்றிய பணி அறிஞர்களால் அற்புதமாக எண்ணப்பட்டது இந்து சமயம், இந்து நாகரிகம், இந்தியக்கலைகள் உலகில் இருக்கும்வரை இவர் திருநாமம் அழியாது விளங்கும் என்பது உண்மை.

ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் புகழ் பூத்த தமிழ்மக்கள் திலகமாக விளங்கிய சேர். முத்துக்குமாரசுவாமி அவர்களின் அருந்தவப் புதல்வர். அன்னார் 1877 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ஆ திகதிகொழும்பில் பிறந்தார். சேர். முத்துக்குமாரசுவாமி அவர்கள் எதிர்பாராத விதமாக நோய்வாய்ப்பட்டு 1879 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி காலமானார் ஆனந்தக்குமாரசுவாமி பிறந்த எட்டாம் மாதம் அன்னையாருடன் இங்கிலாந்து சென்றிருந்தார். கணவனின் மறைவால் தொடர்ந்து இங்கிலாந்தில் வாழ்ந்த திருமதி முத்துக்குமாரசுவாமி மகனை கண்ணும் கருத்துமாக வளர்த்து பி எஸ் சி பட்டம் பெறச் செய்தார். ஆங்கிலத்தில் விற்பன்னராக திகழ்ந்த ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் தமது அறிவை அங்குள்ள அறிஞர்களின் உதவியுடன் மேலும் வளர்த்தார்.

இவர் சிறந்த நிலநூற் பண்டிதராக விளங்கியதைக் கண்ட இலங்கை அரசினர் 1903 ஆம் ஆண்டு தமது உலோக பரிபாலனப் பகுதித் தலைவராக நியமித்தனர். அறிஞரது அறிக்கைகளைப் படித்த லண்டன் சர்வகலாசாலையினர் அவருக்கு அறிஞர் (டி. எஸ். சி என்னும் பெரும்பட்டத்தை 1906 ஆம் ஆண்டு வழங்கிக் கௌரவித்தனர்.

தந்தையார் வழியில் மைத்தனுகிய ஆனந்தக் குமாரசுவாமியும் சிறந்த கலையார்வம் மிக்கவராகத் திகழ்ந்தார். தந்தையார் சேர். முத்துக்குமாரசுவாமி அரிச்சந்திர மகாராசாவின் கதையை ஆங்கிலத்தில் நாடகமாக எழுதி அதனை விக்டோரியா மகாராணிக்கு முன்பாக விளக்கிப் பெரும் புகழ் பெற்றவரன்றோ? தரையைக் குடைந்து உலோகங்களின் அமைப்பை அறிய முயற்சித்த அவரது மனம், இலங்கையிலுள்ள சிற்ப, ஓவியங்களில் அதிக நாட்டத்தை ஏற்படுத்தியது. டகோபாக்களில் காணப்பட்ட சிற்ப உருவங்களும் மலைச் சுவர்களின் குகைகளிலே தீட்டப்பட்டிருந்த வர்ண ஓவியங்

## கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமியின் கவின்மிகு சிந்தனைகள் தமிழில் வரவேண்டும்

களும் அவரைக் கவர்ந்தன. இவற்றை ஆராய்வதில் ஆர்வம் காட்டிய ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் இவற்றின் வரலாற்றை உலகறியச் செய்ய விரும்பி 1907 ஆம் ஆண்டு தமது உக் [illegible] றும் நீங்கினார். [illegible] வெளியிட்டார் இந்நூல் 1971 ஆம் ஆண்டு சிங்களத்தில் எச். எம் பிரேமரத்தின என்ற சிங்கள அறிஞரால் மொழி பெயர்க்கப்பட்டு சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது. [illegible] அறிஞர் [illegible] அறிந்த பல கலைச் செல்வங்களின் குறிப்புகளைச் சேகரித்துக் கொண்டு இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு இரண்டாண்டுகள் இடைவிடாது உழைத்து உலகப் பிரசித்தி பெற்ற இடைக்காலச் சிங்களக் கலைகள் என்னும் சிறந்த நூலைத் தமது முதல் நூலாகத்திலுள்ள இடமேகம என்ற கிராமத்தில் வசித்தவராவர்.

ஆனந்தக்குமாரசுவாமி அவர்களின் இந்நூல் பூர்வீக இலங்கை மக்களின் கலைச் செல்வத்தை உலகிற்குத் தெரியப்படுத்தியதுடன் அன்னாரது கலைப் பண்பையும் கலைப் பொருள்களை ஆராய்ந்து உணரும் திறனையும் எடுத்துக் காட்டியது இதன் பின்னர் இந்திய சிற்பி என்னும் நூலையும் வெளியிட்டார். அவரது புகழ் படிப்படியாக உலகளாவியதாக விளங்கிற்று. இந்தியக் கலைகளின் மதிப்பை உலகறியச் செய்த செம்மல் ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள்.

உலகப் புகழ் அடைந்த அறிஞர் அவர்கள் 1919 ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள போஸ்டன் நகரத்துக் கலைப்பொருட்காட்சி நிலையத்தில் கீழைத் தேசக் கலைப் பொருட்பகுதித் தலைவராக நியமனம் பெற்றார் இந்நிலையத்திற்கு வேண்டிய கலைப் பொருட்களைச் சேர்க்க உலகம் முழுவதும் சுற்றி இக்காட்சிசாலையை அரிய பொக்கிஷாலையாக்கினார்.

இவைபற்றிப் பல ஆராய்ச்சிக் கட்டுரை

புத்தொளி

களையும் நூல்களையும் வெளியிட்டார் இவை பல நாட்டுமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன இந்திய அறிஞர்கள் ஆனந்தக்குமாரசுவாமியின் திறமையையும், இந்தியக் கலைகளின் பெருமதியையும் அவர் நூல் வாயிலாக அறிந்து ஆனந்தமடைந்தனர். அறிஞர் அவர்கள் தமது அறுபதாம் வயதில் போஸ்டன் நகரிலே அமரரானார்.

அறிஞர் அவர்கள் இந்தியக் கலைவளர்ச்சிக்குச் செய்த தொண்டுகள் பல. அவர்களால் வெளியிடப்பட்ட நூல்களில் தலைசிறந்து விளங்குவது 'இந்தியக் கலைகளின் வரலாறு' என்னும் நூலேயாகும் சைவசமயத் திருவுருவங்களில் சிறந்தது நடராஜவடிவமேயாகும் திருமூலர் திருமந்திரம், திருவதிகை மனவாசகங் கடந்தார் உண்மை விளக்கம் முதலிய நூல்களில் நடராஜர் தத்துவங்கள் பற்றி விளக்கப்பட்டிருக்கின்றது ஆனால், இவரது தாண்டவ வடிவத்தில் கலைச் சிறப்பினையும், தத்துவக் கருத்தினையும் உலகத்தார் அறிய எடுத்து விளக்கிய முதற்பெருமை அறிஞரையே சாரும்.

சிவநடனம் என்னும் ஆங்கில நூலில் அவர் நடராஜ வடிவத்தைப் பற்றி எழுதி வெளியிட்ட கருத்துக்கள் இன்னும் அறிஞர் தம் கருத்தைக் கவர்ந்து கொண்டே இருக்கின்றன இந்திய சிற்பத்தினைக் கற்று ஆராய்ந்த மேல்நாட்டினர் சிலர் புத்தபகவானது திருவுருவங்களை இந்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பாய் வெங்காயச் செய்கை

# கோதிப்புழு குறித்து மிகக் கவனம் தேவை

(சென்ற வார தொடர்)

வெங்காயத் தாள் கோதிப்புழுவின் நிறைவுடலி ஓர் மென்மையான அந்துப்பூச்சியாகும். வெளிறிய கபில நிறமுடைய இதன் முன்னிறக்கைகள் ஒவ்வொன்றும் ஓர் கரும் கபில நிறமான புள்ளியைக் கொண்டுள்ளன. இவற்றின் பின்னிறக்கைகள் வெண்ணிறமுடையன. இதன் உடம்பின் சராசரி நீளம் 0.85 ச.மீ ஆகும் 8-10 நாட்கள் வரை வாழும் ஓர் பெண்

## தாயகம்

அந்து 300-400 முட்டைகளை இடும். அந்திப் பொழுது முதல் நடுச் சாமம்வரை இவற்றின் நடமாட்டத்தை வயல்களில் அவதானிக்கலாம். பகற்பொழுது இவை தாள்களில் மறைந்து வாழும்.

முட்டை: தாள்களின் மேற்பகுதியில் முட்டைகள் கும்பலாக இடப்பட்டு அந்தின் அடிவயிற்றில் உள்ள கபிலநிற உரோமத்தால் மூடப்பட்டிருக்கும். ஓர் முட்டைக் கும்பலுள் 100-150 முட்டைகள் வரை காணப்படும். 0.5 மி.மீ விட்டமுடைய இதன் முட்டைகள் 2-3 நாட்களில் பொரிக்கும்.

குடம்பி: முட்டை பொரித்ததும் இளம் குடம்பி தாளைத் துளைத்து உட்சென்று கோதி உண்கின்றன 14-25 நாட்களில் முதிர்ச்சியடையும் இக்குடம்பியின் சராசரி நீளம் 2.4 ச.மீ. ஆகும். பச்சை - சாம்பற்பச்சை நிறமுடைய இப்புழுவின் தலை கரும்பச்சைக் கபில நிறமானது.

கூட்டுப்புழு: முதிர்ச்சியடைந்த குடம்பி நிலத்தினுட் சென்று 2-4 ச.மீ. ஆழத்தில் தன்னைச்சுற்றி ஓர் தடித்த கூட்டினை அமைத்து மினுமினுப்பான கபில நிறமுடைய கூட்டுப்புழுவாக மாறும். இதன் சராசரி நீளம் 1.1 ச.மீ ஆகும். 7-9 நாட்களில் கூட்டை வெட்டிக்கொண்டு அந்துப்பூச்சியாக வெளிவரும்.

தாக்கம்: குடம்பிகள் தாள்களின் உட்சென்று நுனியிலிருந்து கீழ் நோக்கி கோதி உண்கின்றன தாக்கப்பட்ட பகுதி வாடி உலர்ந்து விடும். தாள்களின் உள்ளே புழுக்களின் கறுப்பு நிறமான எச்சத்தை அவதானிக்கலாம். தாக்கப்பட்ட பகுதி வாடி உலர்ந்து சிலவேளைகளில் உடைபட்டு விழும் இதனால் தாள்கள் வெட்டப்பட்டது போன்றும் தோற்றமளிக்கும்

இப்புழு மிளகாய், கறிமிளகாய், பீட்றூட், கௌபீ, சாறணை, கீரை, தயிர்வளை, மூக்கறச்சி முதலானவற்றையும் விரும்பியுண்ணும்.

கட்டுப்படுத்தல்:

வரம்புகளையும், தோட்டத்தையும் களைகள் இல்லாது சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். பயிர்க்கழிவுகளில் புழுக்கள், முட்டைகள் இருக்குமாதலால் இவற்றைச் சேகரித்து உடனுக்குடன் எரித்து அல்லது ஆழமான குழியில் புதைத்து அழித்துவிட வேண்டும்.

இது பயிரின் இளம் பருவத்திலேயே விரும்பி அதிகளவில் முட்டைகளை இடுகின்றது. முதிர்ச்சியடையும் பயிரை விரும்புவதில்லை. எனவே நாற்றுப் பருவத்திலும், நாற்று நட்டு 2 வாரம் வரையும் ஓர் முட்டைகொல்லிப் பூச்சிநாசினியையும், அதன்பின் 6-7 வாரம் வரை புழுக்களை அழிக்கும் பூச்சி நாசினிகளையும் வாரம் ஒருமுறை கிரமமாக விசிற வேண்டும்.

பொதுவான நோய்கள்

குமிழ் அழுகல்:(Bulb rot)

பியூசேரியம் சொலனை (Fuserium Solani) எனும் ஓர்வகைப் பூஞ்சணத்தினால் இந்நோய் ஏற்படுகின்றது. இது ஓர் மண்வாழ் பூஞ்சணமாகும். பயிரில் ஏற்படும் காயங்களினூடாக உட்சென்று தாக்குகின்றது நாற்று நடுகை, களைகட்டல், நீர்ப்பாசனம் செல்தல் போன்ற செய்கைகளின் போது பயிரில் காயங்கள் ஏற்படலாம் அல்லது வேர், குமிழ் முதலானவை பூச்சிகளினால் தாக்கப்படும் போதும் காயங்கள் ஏற்படலம் மிதமிஞ்சிய ஈரலிப்பு இந்நோயை ஊக்குவிக்கின்றது

நோய் அறிகுறி: ஆரம்பத்தில் முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறமடைந்து வாடிமடியும் தொடர்ந்து இளம் இலைகளும் அவ்வாறு மடியும். இதனால் பயிர் முற்றாகப் பட்டுவிடும். பிடுங்கிப் பார்க்கும் போது வேர்களும் குமிழும் அழுகிக் காணப்படும்.

கட்டுப்படுத்தல்:

இந்நோயை அவதானித்தவுடன் நீர்ப்பாசனத்தைக் குறைத்து ஈரலிப்பைக் கட்டுப்படுத்த வேண்டும் கீழ்க்காணும்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## கமழும் புலமை

# வடக்கில் வளர்ந்துவரும் வனவிலங்குச் சரணாலயம்

- எஸ். ஜெகதீசன் -

வாங்கோ! என்ன மாதிரி நாட்டிலை பிரச்சினை? அதுசரி...வந்தனியள் எனக்கு முருங்கையிலை அது இது என்று அன்பாய் ஏதாவது கொண்டு வந்தனீங்களே? ஆ...இண்டைக்கு இல்லாட்டி நாளைக்கு கொண்டுவாங்கோ!

இப்படி ஓர் அன்பான வேண்டுகோள் விடுக்கின்றது சிறிய முயல் குட்டி ஒன்று!

டிஸ்னிலாண்ட்டில் உள்ள அந்த பெரிய பல்லும் கையில் கரட்டும் வைத்திருக்கும் முயல் அல்ல இது.

நமது தமிழ் மண்ணில்... ஒரு ரம்மியமான சூழலில் மனதை நிரப்பும் மகிழ்ச்சியில்.

—அந்த வேண்டுகோள் மெய்சிலிர்க்க வைக்கின்றது

கந்தர்மடத்தில்

கந்தர்மடத்திலுள்ள பண்டிதர் சரணாலயத்தில் காலடி எடுத்து வைக்கின்றோம். நெஞ்சை வாட்டும் பிரச்சினைகளுக்கு எப்பவோ விடை கொடுத்துவிட்டு—

மகிழ்ச்சி ஆரவாரமாக குழந்தைகள்.. சிறுவர்.. பெரியவர் . முதியவர் .

நாம் செல்லவேண்டிய பாதையில் திட்டமிட்டே நடக்கின்றோம் என்ற பிரமையையும் பெருமையையும் சகலரிடத்திலும் காணமுடிகின்றது.

வாசலில் நுழைந்ததும் இடது பக்கம் திரும்பினால்—

நாயொன்று!

பௌஸர் இனத்தைச் சேர்ந்தது

குழந்தைகள் அதைக் கண்டு மிரள்கின்றார்கள்

பெரியவர்கள் அதைக் கண்டு சற்றே இரண்டு அடி பின்வாங்குகிறார்கள்.

ஊஞ்சல்

அடிபனத்தால் கோலமிட்ட பயத்தினை விலக்க குழந்தைகள் அடுத்துள்ள ஊஞ்சலுக்குத் தாவி ஓடுகின்றார்கள்

ஊஞ்சல் ஆடி ஆடி.. களைத்தவுடன். சறுக்கிஸாற்குப் பறக்கின்றார்கள். பின்னர் சுழலும் நாற்காலிகள் பின்னர் ஸீ. ஸோ. இவர்களுடன் சேர்ந்து பெற்றோரும் ஓடுகிறார்கள் வளர்ந்த சகோதர-சகோதரிகளும் ஓடுகின்றார்கள்.

சிறுவர் விளையாட பெரியவர் அவர்களை பார்க்க .

எங்கும் மகிழ்ச்சி எதிலும் மகிழ்ச்சி!

இவற்றை எல்லாம் பார்த்து தாமும் தமது கூண்டினுள் ஓடித்திரிகின்றன இரு மர அணில்கள்!

அதையும் தாண்டி அங்காலே சென்றால் நம்மை கிளி சோழி வரவேற்கின்றது.

'நாராயணா! நாராயணா!!' தமது கன்னத்தில் தட்டிக்கொள்ளும் பாட்டி எல்லோரது பார்வையையும் ஒரு கணம் தன்பக்கம் இழுக்கின்றாள்!

அவளது பக்தியைத் தூண்டிய பருந்து ஒன்று அங்கே அமைதியாகக் காட்சி தருகின்றது!

நமது குழந்தைகள் எல்லாருமே பருந்தை இவ்வளவு கிட்டடியில் பார்த்திருக்க சந்தர்ப்பம் இதுவரை கிடைத்திருக்காது என்பது அவர்களது ஆவல் ததும்பும் பார்வை எமக்கு எடுத்துக் கூறுகின்றது.

சிலுக்கு

அடுத்த பகுதி—

கூட்டத்தால் நிரம்பி வழிகின்றது!

ஒருவேளை 'சிலுக்கு' நடனமாடுதோ என எண்ணவைக்கும் ஒரு கூட்டம்! கூட்டமென்றால் கூட்டம் 'அப்படியான கூட்டம்!!

கையில் இருக்கும் குழந்தைகளும் 'பிய்த்துப் புடுங்கிக்கொண்டு' அந்தக் கூண்டண்டை பறக்கின்றன.

குரங்குகள்!!

தமது வழமையான சேட்டைகளை உள்ளுக்குள்ளேயே நடத்துகின்றன.

தயவு செய்து சோணம் கொடுக்க வேண்டாம் என ஓர் அன்பான அறிவிப்பு வெளியில் தெரிகிறது.

குரங்குச் சேட்டைகள் வெளியே நடைபெறாத வண்ணம் கண்ணும் கருத்துமாகச் செயற்படுகின்றார்கள் பண்டிதர் சரணாலய நிர்வாகிகள்.

இதுவரை காலமும் கோயில் வாகனங்களில் மட்டும் மயிலைக் கண்டு ரசித்த சிறுவர்கள் அதன் அழகை நேரடியாகவே காணும் பாக்கியத்தை அடுத்துப் பெறுகின்றார்கள்.

அவர்களது முகத்தில் காணப்படும் பூரிப்பு, நிலவில் முதலாவது காலடியை பதித்த நீல் ஆம்ஸ்ரோங்கின் முகத்திலகூட இருந்திருக்குமோ தெரியாது!

மயிலுக்கு அடுத்தது புறாக்கள் - கறுப்பாய் வெள்ளையாய் 18 புறாக்கள்.

தாராக்கள்... குவாக் குவாக் என்று கத்திய படி..

இவற்றை சாதாரணமாக எங்குமே காணமுடிவதாலோ என்னவோ . யாரும் லட்சியப்படுத்தினதாகத் தெரியவில்லை. அவையும் தாமுண்டு தம்பாடுண்டு என்றே இருந்தன

ஆனால்.. இந்த நேரத்தில் ஆங்காங்கே காணப்படும் வேங்கைகளின் படங்களை பார்க்கும் பொழுது... அவற்றில் எழுதப்பட்ட வீரவாசகங்களை படிக்கும் பொழுது.. மகிழ்வின் உச்சத்திலும் . துயரம் நிழலாடத்தான் செய்கின்றது.

இனிமேல் என்ன? என்று கேட்பவர்களுக்கு, இதோ! நான் இருக்கிறேன் என்று பதில் கூறுகிறது அடுத்த கூண்டு

ஆமையும் முயலும்

அசற்கும் அடுத்தது முயல்கள். தமது கூண்டுக்குள் துள்ளித் துள்ளி ஓடி.. ஆமையும் முயலும் கதையை நினைவூட்டுகின்றன

சினிமாவில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் குரல் தனித்து ஒலிப்பதுபோல மேடை நடிகமணி வைரமுத்துவைப்போல் அந்த ஆர

(7 ஆம் பக்கம் பார்க்க)

# பட்டதாரிகளுக்கும் தொழிற்கல்வி அவசியம்

ச. சுப்பிரமணியம்
கல்வி அலுவலர் (தொழில் நுட்பம்)

இன்று பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களும் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறிய பலரும் வேலையேதும் இல்லை என்று வீட்டில் இருந்து பிறரின் உழைப்பில் உண்டு வாழ்வது கண்கூடாகும். இந்த நிலைக்குக் காரணம் என்ன? கல்வியைப் பெற்றிருந்தும் பட்டங்களைப் பெற்றிருந்தும் ஒரு தொழிலைத் தெரிந்து கொள்ளாமைக்கு உரிய காரணம்; கைத்திறன், நல்மனப்பாங்கு தொழில் பற்றிய அறிவு ஆகிய மூன்றும் ஒருங்கே பெற்றுக் கொள்ளாமையாகும். வெறும் அறிமுறையாக ஏட்டுக் கல்வியைப் பெற்றுப் பரீட்சையில் சித்தியெய்தியிருந்தும் கைத்திறன், நல்மனப்பாங்கு இன்மையால் கைத்தொழில்களில் ஈடுபடமுடியவில்லை

தராதரமா? அனுபவமா?

சிலர் தனியே கைத்திறன் மட்டும் பெற்றிருந்தும் தொழில் பற்றிய அறிவு, நல்மனப்பாங்கு இன்மையால் தொழில்களைப் புரிய முடியவில்லை முதலாவது கூறியதற்கு தொழிற்கல்வியில் செய்முறை ஏதும் கற்காது தகுதிப்பத்திரம் பெற்றவர்களையும் மற்றதற்கு பாடசாலைகளில் தொழில் பாடமாக வெறும் செயல்முறை அனுபவத்தை (கைத்திறன்) மட்டும் பெற்றுக்கொண்ட மாணவர்களையும் கூறலாம்

பாடசாலைக் கல்வி முக்கியம்

எனவே மாணவர்கள் பாடசாலையை 'எதிர்காலமெனும் மண்டபத்துக்கு இட்டுச் செல்லும் ஒரு நடைபாதையாகக் கொள்ளாது; வாழ்ந்து கொண்டிருக்கும் அறை' எனக் கொள்ளுதல் அவசியமானதாகும் இப்போதே வாழக் கற்றுக் கொண்டால்தான் பிற்கால வாழ்வையும் சரியாக வாழலாம். எனவே பூரண மனிதனின் குணஇயல்புகளுள் ஒன்றான பொருளாதார வளத்தைப் பெருக்குவதில் பாடசாலைக் கல்வி மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது என்பது தெளிவாகும்.

பாடசாலையை விட்டு வெளியேறும் வெளியேறிய பல இலட்சக்கணக்கானோர் தமது பொருளாதாரத்தைத் தாமே பெருக்க முடியாமைக்குக் காரணத்தையும் ஆராய வேண்டியது அவசியமாகின்றது.

தொழிற்கல்வி அவசியம்

கைக்குரிய திறன், அறிவு, நல்மனப்பாங்கு ஆகியவற்றை மாணவர் பெறுவதற்கு வழி சமைப்பது பாடசாலைத் தொழிற் கல்வியாகும். தொழிற்கல்வியாக நெசவு, மரவேலை, உலோக வேலை, மனையியல், விவசாயம், மோட்டார் பொறித் தொழில், வானொலி பேணல், வனைதல், தையல் ஆகிய பாடங்கள் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றன

இடைநிலைப் பாடத்தில் கற்கும் ஒவ்வொருவரும் ஏதோவொரு தொழிற் பாடத்தைக் கற்க வசதி செய்யப்பட்டுள்ளது ஏதாவது ஒரு தொழிற் பாடத்தைக் கற்கும் மாணவர்கள் அத்தொழிலுக்குரிய செயல் திட்டங்களைப் பின்பற்றி உற்பத்தியிலீடுபடும்போது கைக்குரிய திறன்களைப் பெறவேண்டும்.

எவ்வாறு? எங்கே?

அத்தொழிலானது எவ்வாறானது? அதற்கான மூலப்பொருள்கள் எவை? உபபொருள்கள் எவை? அவற்றை எங்கே பெறலாம். மூலப்பொருள்களைக் கொண்டு எவ்வாறு உற்பத்தியை மேற்கொள்ளலாம்

செய்யப்பட்ட உற்பத்தியை (சேவை பொருள்) எவ்வாறு சந்தைப்படுத்துவது? விற்பனைப்படுத்தும் முறைகள், தொழிலுக்கான பதிவுகள் எவை? எவ்வாறு செய்யப்பட வேண்டும்? இத்தொழிலோடு தொடர்புடைய ஸ்தாபனங்கள் எவை? அவற்றின் சேவைகள், கடமைகள் எவை? ஈடுபட்டுள்ளவர்கள் யார் அவர்களின் சேவையின் தன்மை என்ன?

ஆகிய பல்வேறு பரந்த அறிவுகளைப் பெறுவதோடு; சந்தைப்படுத்தக்கூடிய பொருள் உற்பத்தி சேவையை உற்பத்தி செய்வதில் நம்பிக்கை, பெருமை கொள்ளலும், உடலால் ஈடுபடும் தொழில்கள் குறைவற்றவை என்ற நல்மனப்பாங்கும் பெறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

ஒரு தொழிற்பாடத்தில் பெற்ற அறிவு, கைத்திறன், நல்மனப்பாங்கு ஆகியன தான் கற்ற தொழிலுக்கு உதவுவது மட்டுமன்றி வேறொரு தொழிலைச் செய்வதற்கும் உதவுகின்றது.

பட்டதாரிக்கும் தேவையானது

'பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்குத் தொழிற்பாடம் அவசியமில்லை' எனக் கருதுவோரும் அனேகர் இன்றுளர் இக்கூற்று கல்வியின் உண்மையான நோக்கங்களை அறியாமையால் எழுவதே. பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் பட்டதாரிகளும் எந்திரிகளும் செயல்முறைக் கைத்

(7 ஆம் பக்கம் பார்க்க)

பொதுக் கல்வித் திட்டத்தில் தொழில் நுட்ப போதனை - 2

## பண்டிதமணி..

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றும் வருடத்தில் எட்டாம் வகுப்புக்கான திட்டம் இப்படி இழுத்துக் கொண்டு போவது அது. அவரின் திட்டம் நீளமாயிருந்த வகையில், அவரின் நினைப்பும் தடிப்பாயிருந்தது தக்கபண்டிதர் ஒருவர் தம்மை நாடிவந்து மாணாக்கனாகி. இருவென இருந்து படிக்கின்றாரே என்பதை நாள் தோறும் சொல்லிக் கொண்டே திரிந்தார்

பண்டிதமணி அவர்களும் என் செய்வோம் எனக்கருதி ஆறும்வகுப்புக்கான கணிதப்புத்தகத்தோடு உலாவத் தொடங்கினார் ஒருநாள் நடராசா அவர்கள் இவரின் போக்கைக் கண்டார். அக்காலத்தில் நடராசா அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராயிருந்தார். அவர் பண்டிதமணி அவர்களிடம் கணிதப் புத்தகத்தையும் அப்பியாசக் கொப்பியையும் கைப்பற்றிக்கொண்டு சரி. வருகிற சித்திரை விடுதலைக்கு என்னிடம் கணிதம் படிக்கலாம் தயவு செய்து தலைமையாசிரியருக்குச் சிரமம் கொடுக்க வேண்டாம். அவருக்கு நீ சிரமம் கொடுத்தால், அவர் உனக்குச் சிரமம் கொடுப்பார். நீ போய் வா,' என்று கூறி விடை கொடுத்தார்.

(தொடரும்)

## குண்டர்தம்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

டார் குண்டர் எனத் திருநாவுக்கரசு நாயனார் இகழுகின்றார்.

இன்றைய அரசபயங்கரவாதத்தின் போதும் குண்டர்கள் பயன்தரும் மரங்களை நாடாமல் அரச மரத்தையே நாடுகின்றார்கள் இக்குண்டர்கள் இந்த நாட்டையே காடாக்கி வருகிறார்கள் திருநாவுக்கரசரது அன்றைய கருத்துக்கும் இன்றைய கால நிகழ்வு [illegible] தெளிவடைவோமாக.

## தாயின் பண்பு நலன்களே...

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யத்தான் வேண்டும். பாலூட்டும் பருவத்திலுள்ள குழந்தையெனில் அதற்காகத் தாய் தனக்கு பிடித்தமற்றனவான உணவுப் பொருள்களாயிருப்பினும் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக உண்ணல் வேண்டும் இது தான் தாய்மையின் பண்பாகும். இன்றைய நவீன காலப் பெண்கள் குழந்தைக்கு பாலூட்டுவதனால் தங்கள் அழகு குறைந்துவிடுமென கருதி பால்மாவினை நாடுகின்றார்கள் இதுவும் பெண்மைக்கே இழுக்கான செயலல்லவா? குழந்தைக்கு வரும் துயரை தன் துயராக எண்ணி அதற்காக தான் வருந்தும் அன்றைய பாரதி கூறிய தாயான வள் இவ்விதம் செய்வாளா?

உன் கண்ணில் நீர் வடிந்தால் கண்ணம்மா

என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி...... எனும் அடிகள் அன்றைய தாய்மைப் பாசத்தின் வெளிப்பாடாகும்.

அன்றைய உலகில் முற்றும் துறந்த முனிவர்களாலும் மறக்கமுடியாத பாசமாக தாய்மை அன்பிருந்தது பார் அனைத்தும் பொய்யெனத் துறந்த பட்டினத்தடிகளே தன் அன்னை தன்னை எவ் விதமெல்லாம் வளர்த்தெடுத்தாளென்பதை

"நொந்து சுமந்து பெற்று நோவாமலேந்தி முலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்"...... என தாயாரின் மரணச் சடங்கில் ஈமக்கிரியைகள் செய்கையில் பாடுகின்றார் இப்பாடல் ஓர் தாயாரின் கடமைப்பாடுகளையும் உணர்த்துகின்றது.

உலகியலில் மாத்திரமன்றி ஆத்மீகத்திலும் தாய், சேய் உறவு முறைகள் பக்திப்பாசங்களில் கையாளப்பட்டு வருகின்றன. வைணவசமய பக்தரான பெரியாழ்வார் தன்னை அன்னையாகவும், கண்ணனை குழந்தையாகவும் பாவனை செய்து அவனது குழந்தை லீலைகளெல்லாம் தான் அனுபவித்தாகப் பாடுகின்றார்.

## கவிதை நினைவுகளில்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

புலவரும் விட்டபாடில்லை 'கொழும்பில், இரங்கூனில் இருப்பவர்கள் திரும்பிவரக்கூடும், அழகி கற்பகம் மீண்டும் இங்கு வருவாளோ' இவ்வுலகில் நீ அவளை மீண்டும் காண்பாயோ?' என்று கேட்கிறார் அவளோ 'கற்பகம் இங்கு வராவிட்டால் நான் அங்கு ஒரு நாள் போவேன் தானே, அவள் நடராஜர் பதத்திலே தானே இருக்கிறாள் வேறெங்கும் போய்விடவில்லையே எனவே யாம் ஐவேம்' என்று விடாப்பிடியாக நிற்கிறாள் புலவர் வாயடைத்து நிற்கிறார்.

இனி இரு பாடல்களிலும் வரும் சில வரிகளைப் பார்க்கலாம்.

William Wordsworth இன் We are seven இல்:
I met a little cottage girl.
She was eight years old. she said,
Her hair was thick with many a curl
That clusterd round her head.
Her eyes were fair, and very fair,
Her beauty made me glad
"Sisters and brothers' little maid,
How many you be?"

வண. இங்ஸ்பரியாரின் யாம் ஐவேம் இல்.
எட்டு வயதுப் பேதை இருண்டசுரிகுழலே
எட்டாம் நாட் பிறைபோன்ற நெற்றியிலே புரளுங்
கட்டழகி இருபுருவம் வில்லென்னலாமோ?
கண்ணிரண்டும் அமுதமெனல் பெருந்துவதேயன்றிக் கணையென்றும் நஞ் சென்றும் கழறவிடம் இல்லை
தங்கச்சி உன் பேர் சொல் அஞ்சு சதம் தருவேன்
தாயுண்டோ, தந்தையுண்டோ சகோதரர்கள் உண்டோ?

இவ் வரிகளில் hair was thick with many a curl என்பது இருண்ட சுரிகுழல் என்பதும் Eight years old girl எட்டு வயதுப் பேதை என்பதும் வரிக்கு வரி வருவதை அவதானிக்கலாம். மேலும் Wordsworth இல் "If two are in the churchyard laid, Then ye are only five" என்பதும் வண இங்ஸ்பரியாரில்.

"ஐவரிலே ஒருத்திநடராஜர் பதம் நண்ணின் பாங்கிபின்னர் நால்வர்உளீர் ஐவீர் என்றல் தவறு ஆராய்அஞ் சினில்ஒன்று போனால்நா லன்றோ" என்று வருவதும் நோக்கற் பாலது

இவ்விரு கவிதைகளையும் நோக்குமிடத்து உள்ள ஒற்றுமைகளை நாம் எடுத்துக்கொண்டாலும் பாடல்கள் தத்தமது கலாசாரங்களுக்கும் சூழலுக்கும் ஏற்ற [illegible] டுள்ளன என்பது புலனா[illegible] என்பது இயற்கையானது மரணத்தில் பிரிவு இல்லை என்பதை இரு புலவர்களும் மிக எளிமையான கிராமப்புறச்சூழலில் இயற்கையிலேயே வளர்ந்து நகர்ப்புறச் சோடனைகளால் நஞ்சாகாத உள்ளங்கள் மூலம் எடுத்தியம்பியது சிறப்புடையதே.

## காலத்தால்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன

அதாவது மொஹஞ்ஜோ தாரோ அழிவுகள் நீங்கலாகப் பார்க்கும்போது, காசிக்கருகிலுள்ள சாரநாத் எனுமிடத்திலுள்ள மேலே சிங்கங்கள் செதுக்கப்பட்ட அழகிய அசோகன் தூணை நீ இன்றும் பார்க்கலாம்

உந்த கடிதம் மிகவும் வளர்ந்து விட்டபடியால் உனக்கு அலுப்பு தோன்றலாம் அசோகர் கட்டளையிலிருந்து ஒரு சிறிய வாக்கியத்தைக் கூறிவிட்டு இக்கடிதத்தை முடித்து விடுகின்றேன்

"எல்லா மதங்களும் ஏதாவது ஒரு காரணம் பற்றி நமது வணக்கத்துக்கு உரியவைகளாக விளங்குகின்றன இதை அறிந்து நடப்பவன் தன் மனத்தை உயர்த்துவதோடு பிறருடைய மதங்களுக்கும் சிறந்த சேவை செய்தவனாகின்றான்" ★

## மேன்மைமிகு....

(5ஆம் பக்க தொடர்ச்சி)

தியச் சிற்பிகள் கிரேக்க உருவங்களைப் பார்த்தே செய்யக் கற்றுக் கொண்டனர் என்ற கருத்தை உலகில் பரப்பினர் ஆனால் அறிஞர் அவர்கள் தக்க சான்றுகளுடன் அக்கருத்தைப் பிழையென்றும் புத்தபகவானின் திருவடிவம் இந்திய நாட்டுச் சிற்பமுறைகளைப் பின்பற்றியே அமைக்கப்பட்டதென்றும் அடித்துக் கூறி மேலைத்தேச ஆராய்ச்சியாளரை வாய்மூடச் செய்தார். இராஜபுத்திர ஓவியங்கள் என்னும் சிறந்த நூல் இன்றும் சிறந்த இலக்கியமாகத் திகழ்கின்றது.

இந்தியாவில் தேசியம், சுதேசியம் என்னும் கொள்கைகள் தோன்றுவதன் முன்னரே தேசியத்தைப் பற்றியும் சுதேசியத்தைப் பற்றியும் விரிவான கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர் அறிஞர் ஆனந்தக்குமாரசுவாமி அவர்களே. கலைத்துறையில் மாத்திரமன்றி சமயத்துறையிலும் பல நூல்களை வெளியிட்டார். நந்திகேஸ்வர அபிநய தர்ப்பணம் இவரது நூலில் சிறந்ததாக விளங்குகின்றது.

அறிஞர் ஆனந்தக் குமாரசுவாமியைப் போல் இந்தியக் கலைகளை ஆராய்ந்தோர் எவருமில்லை என்று துணிந்து கூறலாம் இவரால் எழுதி வெளியிட்ட எந்த நூலும் தமிழ் மொழியில் இன்றுவரை வெளிவரவில்லை. இனியாயினும் வெளிவருமா? இம்மகானின் நூல்கள் தமிழ்மொழியில் எழுதப்படுவதுடன் பாட நூல்களாகவும் விளங்க வகை செய்யப்படுமென்று நம்புவோம். கலாயோகியாகவும், கலாரிஷியாகவும், தத்துவஞானியாகவும் விளங்கிய ஆனந்தக் குமாரசுவாமி அவர்களை தமிழ்மக்கள் மறவாது அவரது ஞாபகம் நிலைபெறச் செய்தல் வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்சிபீடம்...

(3 ஆம் பக்க தொடர்ச்சி) "யாரங்கே" என்று கர்ஜிக்கிறன். ஆயுதம் தட்டப்பட்ட டங்... டங்.. என்ற ஓசை இப்போது நின்று விடுகிறது. மன்னன் கர்ஜித்ததைக் கேட்டு அவனது வெண்குதிரையும் முன்னங்கால் களைத் தூக்கியெழுந்து உளைத்துவிட்டு நிற்கிறது. தளைத் தளபதி கரைப்பிட்டி வன்னியனும் மற்றிரு சேவகர்களும் தம் உறைவாள்களில் கைகளை வைத்தவண்ணம் குதிரைகள் மீதிருந்து கோட்டை வாயிலை நோக்குகின்றனர் அப்போது ஐந்தாறு பறங்கியர் பணிந்தவாறு மெதுவாக வெளியே வருகின்றனர்.

கையும் மெய்யுமாக அகப்பட்டுக் கொண்டவர்கள் திருட்டுவிழி விழிப்பது போல் நின்ற பறங்கியர் 'இனியென்ன மன்னனும் கோட்டையைக் கண்டு விட்டான். எம் சுயவிருப்பத்தை துணிந்து சொன்னாலென்ன''? என்ற இறுமாப்பு எண்ணத்தையும் தம் மனதுள் கொண்டு நின்றனர். பறங்கியரைக் கண்ட மன்னனின் கண்கள் கொவ்வைப் பழம் போல் சிவப்பேற குதிரை மீதிருந்தே கோட்டையைச் சுட்டிக்காட்டி ''இதென்ன'' என்று கோபாவேசமாய் மீண்டும் கர்ஜிக்கிறன்.

பறங்கி; (தடுமாறிக் கொண்டே) இது...இது. மண்கோட்டை மன்னா!

மன்னன்: மண்கோட்டையா... ஹ... ஹ...ஹ எங்கள் மண்ணைக்கிள்ளி எங்கள் கண்களில் தூவப் பார்க்கிறீர்கள்... நம்பிக்கைத் துரோகிகள்.

பறங்கி; ஒன்றும் புரியவில்லை மன்னா...

மன்னன்: புரியாது தான். உன் கொச்சை மொழி எனக்குப் புரிகிறது உங்கள் இச்சையும் எமக்குப் புரிகிறது...

பறங்கி: நாங்கள்... வந்து...

மன்னன்: கொஞ்சம் பொறு...முதலில் வியாபார அனுமதிகோரி வீழ்ந்து வணங்கி நின்றீர்கள். அனுமதிமறுத்த நான் பின்னர் அதற்கு இசைந்தேன். அதன்பின் ஒடங்களிலே தங்கமுடியவில்லை. ஒதுக்குப்புறமாக வீடுகட்ட தத்துவம் தரும்படி மண்டியிட்டீர்கள். அதற்கும் முதலில் மறுத்துநின்ற நான் மந்திரி பரிந்துரை செய்ததால் மனமிரங்கி தத்துவம் தந்தேன். ஆனல் நீங்கள் இரும்பு காய்ச்சித் தட்டுகிறீர்கள். ஆயுதங்கள் செய்கிறீர்கள்... இது உங்களுக்காக நீங்கள் கட்டிய வீடா? எங்களுக்கு நீங்கள் கட்டிய சமாதியா?

பறங்கி: (மௌனம்)

மன்னன்: உங்கள் வியாபாரமென்ன?

பறங்கி: வியாபாரம்.

மன்னன்: (ஆத்திரத்துடன்) என்ன வியாபாரம்... ஆயுத வியாபாரமா..இங்கே நீங்கள் ஆயுதம் குவிப்பது யாருக்காக... எல்லாம் புரிகிறது.. நன்கு புரிகிறது. காட்டுக்குள்ளே சதி. காட்டின் நடுவில் களிமண் கோட்டை...நாடுபிடிக்க நரித்திட்டம்... உங்களைக் கோட்டை கட்ட அனுமதி தந்தது யார்?

பறங்கி: நீங்கள்தான் மன்னா!

மன்னன்: சீ மூடு வாயை. எங்கள் வாள்கள் விளையாடுமுன் வார்த்தை ஜாலத்தால் நீங்கள் விளையாடப் பார்க்கிறீர்கள். நான் வாழ்விடம் அமைக்க தத்துவம் தந்தேனே தவிர கோட்டை கொத்தளம் அமைக்கவல்ல .. இங்கே போருக்கு ஆயுதம் செய்கிறீர்கள்.. நேருக்குநேர் புறப்பட தயாராகிக் கொண்டிருக்கிறீர்கள் உங்கள் நோக்கு வெளிப்படையாகிவிட்டது கள்ளிக் கோட்டையிலும் கோட்டைக்காட்டிலும் உங்கள் வாலாட்டம் பலித்தது போல் இங்கு பலிக்காது .எங்கள் மண்ணை மாற்றன் அபகரிப்பதை நாம் பார்த்திருக்க முடியாது.. சற்றுப் பொறுத்திருக்கவும் முடியாது... போர்க்களத்தில் சந்திக்கவேண்டியதுதான் இது யாழ்ப்பாண இராச்சியம். நீங்கள் தோற்பது, நிச்சயம்.

பறங்கி: (மௌனம்)

மன்னன்: ஏன் மௌனம்.. கோட்டைக்குள் பதுங்கியிருந்து, நாட்டுக்குள் பாயத் தருணம் பார்த்திருக்கும் பறங்கிக் கும்பலே... நாடு பிடிக்க நப்பாசை கொண்டு நாளெல்லாம் அலையும் நரிக்கூட்டமே.. உங்களைப் போருக்கு அறை கூவி அழைக்கிறேன் நாளை சூரியோதயத்தின் பின் போர்க்களத்தில் சந்தியுங்கள். தவறினுல் நாளை மறுநாள் இந்தக் கோட்டையை நான் முற்றுகையிட்டு சுடுகாடு ஆக்கிவிடுவேன். ஜாக்கிரதை... நாளை சந்திப்போம்...வெற்றி நமதே.

இவ்வாறு, ஆவேசமாய்க் கூறிமுடித்த மன்னன் புறப்படுகிறன். நல்லூர் அரண்மனை நோக்கி அவனது புரவி வாயு வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. மன்னன் புறப்பட்டதைக் கண்டதும் பறங்கிகள் கோட்டைக்குள் புகுந்து கொள்கின்றனர்.

(இடமும் நாளும் குறிப்பிட்டு போர் புரிவது அக்கால மரபு)

(தொடரும்)

## கோதிப்புழு...

(6ம் பக்கத் தொடர்ச்சி) பங்கசு நாசினிகளில் ஒன்றை நிலம் நனையும் படி விசிற வேண்டும். 7 நாட்களின்பின் திரும்பவும் ஒரு முறை விசிற வேண்டும்

கப்ரான், 1 அவுன்ஸ் 2 கலன் நீர், டைபோலதான் 1 அவுன்ஸ் 2½ கலன் நீர், மங்கோசெப் 1 அவுன்ஸ் 3 கலன் நீர்.

ஊதாப்புள்ளி நோய்:

இது ஒல்ரனேறியா போறி (Alternaria Pourii) எனும் பூஞ்சணத்தால் ஏற்படுகின்றது. மழை அல்லது பனி அதிகமுள்ள ஈரலிப்பான காலநிலையில் அதிகம் ஏற்படும்.

நோய் அறிகுறி: ஆரம்பத்தில் தாள்களில் வெளிறிய செந்நிறப் புள்ளிகள் போன்ற அடையாளங்கள் தோன்றும். பின்னர் அவ்விடங்களில் தாள்கள் மடிந்து கருகிப் பட்டு விடும்.

கட்டுப்படுத்தல்: கப்ரான், டைபோலதான், மங்காசெப், டைகோனில் போன்ற பங்கசு நாசினிகளில் ஒன்றை ஒரு கிழமை இடைவெளி விட்டு 2 - 3 முறை விசிற வேண்டும் மழை பெய்த பின்பும் பனிக்காலங்களிலும், மப்புமந்தாரமான காலநிலைகளிலும் இடைக்கிடையே இப்பங்கசு நாசினிகளை விசிறுவதன் மூலம் நோய் வராமல் தடுக்கலாம்.

அறுவடையும் சேமிப்பும்: நாற்று நட்டு 3 மாதங்களில் குமிழ்கள் முதிர்ந்து அறுவடைக்குத் தயாராகிவிடும். அறுவடை செய்த குமிழ்களை சேமித்து வைப்பதாயின் 2-3 நாட்களிற்கு நிழலில் காயவிட்டு பிடிகட்டி, காற்றோட்டமான இடத்தில் தொங்கவிட வேண்டும்.

விளைவு: ஒரு ஏக்கரிலிருந்து 5 - 10 தொன் குமிழ்களைப் பெறலாம்.

(முற்றும்)

## சிங்கள...

(3ஆம் பக்க தொடர்ச்சி) முன்வந்துள்ளனர்

இஸ்ரவேல், சீனு,பிரிட்டன் ஆகியன ரோந்துப் படகுகளைக் கொடுத்துள்ளன.

இத்தாலி 6 சியாமார் செட்டி விமானங்களைக் கொடுத்துள்ளது அந்த விமானங்கள் தமிழர் பிரதேசங்களில் குண்டு வீச்சை நடத்தியபோது உலகின் பலபாகங்களிலிருந்து கண்டனங்கள் எழுந்தன.

நிலக்கண்ணிவெடித் தாக்குதலைச் சமாளிக்கும் 30 கவசவாகனங்களை தென் ஆபிரிக்க அரசாங்கம் வழங்கியுள்ளது.

(அடுத்த வாரம் வரும்)

**நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்**

## ஓடிவா எம்மைக்காக்க களம் பல கண்ட கோவே!

நல்லைப் பதியிலுறை நற்றமிழ்க் கோவே சந்தா
ஞன்றிலேயுறைந்து குமரனாய் வந்து நின்றாய்
தில்லையிலுறைந்து நின்ற கூத்திலே
பாட்டுஞ்சேர்க்கும்
திருவுடை இறைவனரின் அருளுடை
இளையமைந்தா
எல்லையிலாப் பெருங்கருணை மூசத்தினிற்
தேங்கி நிற்க
ஆ:விருளகற்றும் ஐய! மெய்மையே பேசி
இல்லையென்றிரப்போருக்கு ஈய்திகரூன்
சுரந்து நின்று
தீவினை போக்கி களவலி உவந்தளிப்பாய்.

தமிழ் மன்னர் பலருமாண்ட தமிழ் மணங்
கமழும் நல்லை
நகரினுக்கொளியுஞ் சேர்த்து
தமிழ் மண்ணுக்கணியுஞ் சேர்க்க வந்தமர்
அழகுத்தேவா
ஒளவைக்கு அருள் சுரந்து
தமிழ்ச் சொல்லுக்கும் பொருளுரைத்து
தேவர் தம் துயரும்
நீக்கி அசுரரை அழித்து நின்றாய்
தமிழ் மண்ணிலே துயரம் நீக்கத்
தமிழ்த் தெய்வம் நீயேயானல்
ஓடிவா எம்மைக்காக்க களம் பல
கண்ட கோவே

— த. சிவசுப்பிரமணியம்

## பட்டதாரிகளுக்கும்...

(6ம் பக்க தொடர்ச்சி) திறன் இன்மையால் தமது கல்வியைச் சரிவரப் பயன்படுத்த முடியாமல் இருப்பது உண்மையாகும்.

திருத்தவேண்டுமா ?

உதாரணமாக எந்திரி ஒருவர் தன் நிர்வாகத்தின் கீழ் வேலை செய்யும் (கைவினைஞர்) தொழிலாளர்களைக் கொண்டு திறமையான வேலைகளைச் செய்விக்கமுடியாமல் இருப்பதற்குப் போதிய கைத்திறன் இன்மையும் ஒரு காரணமாக அறிக்கைகளிற் கூறப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வேலையைத் திருத்தவோ, காட்டிக்கொடுக்கவோ முடியாத நிலையில் அவர்கள் செய்யும் வேலைத்தரத்தையும், நேரத்தையுமே ஏற்க வேண்டிய நிலையில் உள்ளதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கைத்திறனையும், அறிவையும் பெற்றிருக்கும் ஒருவரே இலகுவில் நிர்வாகம் செய்யமுடியும்

ஆசிரியரும் கரும்பலகையும்

இதுபோலவே ஆசிரியத் தொழிலுமாகும். கைத்திறன் அற்ற ஆசிரியர் செயல்முறை உபகரணங்களை ஆக்கவோ அல்லது பயன்படுத்தவோ, பரிசோதனைகளைச் செய்து காட்டவோ முடியாத நிலையில் கரும்பலகையையும், வெண்கட்டியையுமே நம்பி இருக்கவேண்டிய நிலையில் உள்ளதும், வெறும் அறிமுறை அறிவை மாத்திரம் மாணவர்க்குப் புகட்டுவதால் அது ஏட்டுச்சுரைக் காயாவதும் கண்கூடு.

இதற்குக் காரணம் அவ்வாசிரியர்களும் தாம் கற்குப்போதே கைத்திறன் பெற்றிராமையே.

இவ்வாறு கைத்திறன் அற்ற ஆசிரியர், ஆசிரியர் குழு தம் போலவே கைத்திறன் அற்ற மாணவர்களையே பாடசாலையிலிருந்து கற்பித்து வெளியனுப்புகின்றது. இது வருந்தத்தக்க நிலையே. வெறும் அறிமுறை மூலம் நீந்தக் கற்ற மாணவன் ஆழ் கடலில் குதித்து நீந்த முயற்சிப்பது புத்திசாலித்தனமன்று. செயல் மூலம் நீந்தக் கற்றவனே பயன் பெறுவான்.

(தொடரும்)

## தமிழக இடைத்தேர்தல்...

(3ஆம்பக்கத்தொடர்ச்சி) கவுடனும் கூட்டுச் சேருமா?

இந்தப் பேச்சுக்களும் தமிழக அரசியலில் அடிபடாமல் இல்லை.

அப்படி ஒரு பிளவு ஏற்படும்போது அதிமுக எம்.எல்.ஏக்களில் சுமார் 80 பேர் வீரப்பனுடன் நிற்பார்களாம்.

இப்படியும் ஒரு செய்தி.

**வீரப்பனுக்கு முதலாவது தேர்தல்**

இச்சூழ்நிலையில் நெல்லையிலே அமைச்சர்வீரப்பன் அ.தி.மு.க வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.

தனது அரசியல் வாழ்வில் முதல் தடவையாக அவர் தேர்தல் களத்தில் நிற்கிறர்.

மேலவை கலைக்கப்பட்டதால் அமைச்சர் பதவிகளை இழந்த இரண்டு பேரில் வீரப்பன் ஒருவர். மற்றவர் அமைச்சர் ஹண்டே

படத்தயாரிப்பாளராக இருந்து அமைச்சரானவர் வீரப்பன்.

கதாநாயகனாக இருந்து முதலமைச்சரானவர் எம். ஜி. ஆர்.

கதாநாயகியாக எம். ஜி. ஆருடன் படங்களில் நடித்தவர் ஜெயலலிதா.

இன்று எம் ஜி ஆரின் 'அரசியல் கதாநாயகி' அந்தஸ்து பெற முயற்சித்துக் கொண்டிருக்கிறர்.

இருவரையும் வைத்து பல வெற்றிப்படங்களைத் தயாரித்த வீரப்பன், அரசியலில் ஜெயலலிதாவை 'கதாநாயகி'யாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

ஜெயலலிதாவின் எண்ணத்துக்கு 'வில்லனாக'த் தான் வீரப்பன் விளங்குகிறர். இது தமிழக அரசியலில் பகிரங்க ரகசியம்

பெரும்பாலான திரைப்படங்களில் எம். ஜி. ஆருக்கு வில்லனாக வீரப்பாதான் நடித்தார்.

இன்று அரசியல் வாழ்விலும் எம் ஜி. ஆரின் எண்ணங்கள் நிறைவேறுவதற்குத் தடையாக, வில்லனாக விளங்குபவரும் ஒரு வீரப்பன்தான்.

இந்த பின்னணியில் நெல்லையிலே இடம் பெறும் மோதலில் அமைச்சர் வீரப்பன் வெற்றி பெறுவாரா?

அ. தி. மு. கவில் உள்ள வீரப்பன் — ஜெயலலிதா மோதலுக்கு முடிவு கட்ட நெல்லைத் தேர்தல் வழி காட்டுமா?

நெல்லை மாவட்ட அ. தி. மு க தலைவர் பாண்டியன், ஜெயலலிதாவின் தீவிர ஆதரவாளர்.

தேர்தலிலே வீரப்பனுக்கு 'குழி' பறிப்பதன் மூலம் தோல்வி காணச் செய்து அரசியலில் இருந்து அவரை அகற்றி விடலாம் என்று ஜெயலலிதா ஆதரவாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இப்படி திராவிட முன்னேற்றக் கழகம் கூறி வருகிறது.

**தி. மு. க தந்திரம்**

வீரப்பன் திராவிட பாரம்பரியத்தை வளர்ப்பவர். அவருக்குத் தோல்வி கிடைப்பதை நாம் அனுமதிக்க முடியாது என்ற ரீதியில் தி. மு. க தலைவர்கள் செயல்படுகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

1984 தேர்தலில் போட்டியிட்டு சுமார் 30,000 வாக்குகளால் [illegible] மணியன் என்பவரையே தி. மு. க. இம்முறையும் போட்டியிட வைத்துள்ளதன் காரணம், வீரப்பன் இலகுவில் வெற்றியீட்ட வேண்டும் என்பதே

இது தமிழக அரசியல் அவதானிகள் கருத்து

**அருப்புக்கோட்டை**

இதனுல் நெல்லையை அதிகமாகக் கவனிக்காமல் விட்டு அருப்புக் கோட்டையில் தான் தி. மு. க. தீவிர கவனஞ் செலுத்தப் போகின்றதாம்.

1984 தேர்தலில் மிகச் சொற்ப வாக்குகளால் தி மு க 'கோட்டை' விட்ட தொகுதிகளில் அருப்புக்கோட்டையும் ஒன்று.

1984 தேர்தலில் நெல்லை, அருப்புக்கோட்டைத் தொகுதிகளில் பதிவான வாக்கு விவரம் வருமாறு:

நெல்லை:
பாலை நாராயணன் (அ தி.மு. க)— 56,409
ஏ எல். சுப்பிரமணியன் (தி. மு. க) — 37,547
அருப்புக்கோட்டை:
எம். பிச்சை (அ.தி. மு க)—39,839
தங்கபாண்டியன் (தி. மு. க) — 36,405
பெருமாள் பாண்டி (சுயேச்சை)— 10,809

பத்தாண்டு கால ஆட்சியின் உச்சக்கட்டத்தில் உட்கட்சிப் பூசல் என்ற வேதனையின் விளிம்பில் துயருறும் முதலமைச்சர் எம். ஜி ஆருக்கு, மாத இறுதியில் நடைபெறும் இந்த இடைத்தேர்தல்கள் வெற்றி அளிக்குமா? நிம்மதி அளிக்குமா?

இம்மாதம் 31 ஆம் திகதி விடை கிடைத்து விடும்.

★

## போற்றினோரை...

(3ஆம் பக்க தொடர்ச்சி) வியாபகத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

"பெரியவனை மாயவனைப் பேருலகம்
எல்லாம்
விரிகமல வுந்தியுடை
விண்ணவனைக்கண்ணும்
திருவடியுங் கையும்
திருவாயும் செய்ய
கரியவனைக் காணுத கண்
ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்
பார்தம் கண்ணென்ன
கண்ணே.

என்ற ஆய்ச்சியர் குரவைப் பாடல் கண்ணனுடைய அழகை சித்திரித்துக் காட்டுகிறது.

### இந்திரலோகம் வேண்டாம்

கிருஷ்ணனுடைய குன்றுத அழகைக் கண்டு பக்திப்பரவசப்பட்ட நிலையில் ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தன. கொண்டல் வண்ணனைவும், வெண்ணெய் உண்ட வாயனுகவும் காட்சியளித்த கண்ணனை 'கண்ட கண்கள் மற்ற ஒன்றினைக் காணுவே' என்று திருப்பாணுழ்வார் பாடிய பாடல் ஈண்டு நோக்கற்பாலது பெருமானுடைய கோயிலில் படியாகக் கிடந்து கண்ணனுடைய பவளவாயைக் காண விரும்பியவர் குலசேகர ஆழ்வார் இந்திரலோகம் ஆளும் பதவியைக் கைவிட்டு கண்ணனுடைய பேரழகில் மனதைப் பறிகொடுத்தவர் தொண்டரடிப் பொடியாழ்வார். தெய்வீக அழகு மக்கள் மனதிலே உயர்ந்த எண்ணங்கள் ஏற்பட உதவுகின்றன.

### கை நோகும் வா

ஆழ்வார்கள் தங்களைப் பலவிதமான நிலைகளில் வைத்துப் பாவனைசெய்து மகிழ்ந்தனர் கண்ணனுடைய குழந்தைப் பருவத்தில் அம்புலி காட்டி தங்களைத் தாயாகப் பாவனை செய்து அவர்கள் பாடிய பாடல்கள் அவர்களின் ஆழமான பக்தியை எடுத்துக்காட்டுகின்றன

பெரியாழ்வார் தன்னை யசோதையாகப் பாவனை செய்து சந்திரனைப் பார்த்து 'நீ ஒளி சூழ அழகாகக் காட்சியளித்தாலும் என்னுடைய குழந்தையின் முகத்திற்கு நிகராக மாட்டாய். என் குழந்தை உன்னை அழைக்கிறதே அதன் கையிலே நோ ஏற்பட்டுவிடும் விரைந்து வா' என்று பாடியுள்ளார். அதே சமயம் குலசேகர ஆழ்வார் கண்ணனுடைய லீலைகள் ஒன்றையும் காணுதநிலையில்வருந்தும் தேவகி போலத் தன்னைப் பாவனை செய்து பாடியுள்ளார்.

### வெண்ணெய் திருடன்

தீராத விளையாட்டுப் பிள்ளையாகிய கண்ணன் செய்த குறும்புகள் அளப்பில. வெண்ணெயைத் திருடுவதும் அதனைத் தனது தோழர்களுக்கும் மற்றைய பிராணிகளுக்கும் கொடுத்து மகிழ்வதும் ஆயர்பாடி நிகழ்ச்சிகளாகும். உறியிலே வைத்த வெண்ணெயைத் திருடுவதிலும் கண்ணன் நிகரற்று விளங்கினுன். கண்ணனுடைய லீலைகளை சாதாரண விளையாட்டுகள் என நாம் நினைக்கக்கூடாது உலகியலில் மூழ்கி இறைவனை மறந்த நிலையில் வாழ்ந்த மக்களுக்கு தனது குறும்புச் செயல்கள் மூலம் இறை சிந்தனையை ஏற்படுத்தினுன்.

அன்பு, ஜீவகாருண்யம், அறச்சிந்தனை நிறைந்த உள்ளங்கள் வெண்ணெய் போல மென்மையானவை. மென்மையான உள்ளங்கள் பிறர் துன்பம் கண்டு உருகும் தன்மை வாய்ந்தன. எனவே அத்தகைய உள்ளங்களைக் கண்ணன் திருடினுன் என்பது புலனுகிறது.

### வேணுகோபாலன்

கவின்கலைகளுள் இசைக்கலை மிகவும் சிறந்தது சகல ஜீவராசிகளையும் தம்வசப் படுத்தும் தன்மை இசைக்குண்டு. வேணுகோபாலன் புல்லாங்குழல் மூலம் எழுப்பிய இசை கொடிய மிருகங்களை அமைதியடையச் செய்தது. இதனைக் கேட்டு மகிழ்ந்த கோபியர்கள் தங்கள் கடமைகளை மறந்து கண்ணன் இருக்கும் இடம் தேடி வந்து அவனுடன் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். அந்நிலையில் கண்ணன் தனக்கே உரியவன் என்ற எண்ணம் ஒவ்வொரு பெண் உள்ளத்திலும் உதித்தவுடன் கண்ணன் அவ்விடம்விட்டு மறைந்தான் ஆணவம் இருக்கும் வரை கண்ணனுடைய அன்பு கிட்டாதென உணர்ந்த கோபியர்கள், கண்ணனிடம் தங்கள் அகந்தையை அகற்றுமாறு பணிந்து வேண்டினர். அப்பொழுது கண்ணன் கோபியர் வசமானுன். உலகப்பற்றற்றவர்களாக, தூயமனத்தோடு, உடல் பொருள் ஆவி அனைத்தையும் கண்ணனிடம் அர்ப்பணித்தனர். கோபியர்கள் கண்களால் கண்ணனுடைய அழகிய காட்சிகளைக் கண்டும், குழலோசையையும், இனிய பேச்சையும் செவிகளால் கேட்டும், நலம் தரும் நாராயணன் நாமத்தை நவின்றும், சீரிய நெறியில் ஒழுகினர்.

மக்களுக்கு ஏற்றவிதமாக பலபல வேடம் தாங்கி பொருத்தமான முறையிலே மானுட உறவுகொண்டு பக்தர்களை நல்வழிப்படுத்தி தனது அவதாரத்தின் நோக்கத்தை கண்ணன் நிறைவு செய்தான்.

கிருஷ்ண ஜயந்தி நன்நாளிலே வேங்கடம் மேய பகவானுக்கு பாமாலையும் பூமாலையும் சூடி நாராயணன் நாமத்தை எண்ணி கண்ணன் கழலினை வழிபடுவது, பக்தர்களுடைய கடமையாகும்.

★

## வடக்கில்...

(6ஆம் பக்கதொடர்ச்சி) வாரத்திலும் கீச். கீச்.. எனத் தமது குரலை தனித்துவமாக ஒலிக்க வைக்கும் 'காதல்பறவைகள்'!

பெத்தம்மா.. பெத்தம்மா.. என மழலை பேசும் சிறுவர் கூட்டத்தால் சூழப்பட்ட கிளிகள்..

'சின்னக் குயில் பாடும் பாடல் கேட்டதோ' எனப் பெரியவர்கள் பாடியபடி தமது சிறுவர்களுக்குக் காட்டும் குயில்கள்.

—இவ்வளவையும் பார்த்தால் பண்டிதர் சரணலயத்தில் ஒருபகுதி பூர்த்தியாகி விடுகின்றது.

அடுத்தபகுதி—

சுதந்திரமடையத் துடிக்கும் பூமியில் சுதந்திரமாகத் திரியும் சில மிருகங்களைக் காணலாம்.

துன்பங்கள் - துயரங்கள் - தொல்லைகள் - கஷ்டங்கள் ஆகியவற்ருல் மரத்துப்போய், மிருக உணர்ச்சியை அனுபவிக்கும் மனிதன் மிருகங்களைப் பார்த்துப்பார்த்து ஏதோ ஒரு மகிழ்ச்சியால் தனது மனதை நிரப்பி மெல்ல மெல்ல மனித சுபாவத்தை அடைகின்றன்.

இதை ஒவ்வொருவரிடமும் போதிக்கும் பண்டிதர் சரணலயத்தின் இரண்டாம் பகுதியில்--

வாத்துக்கள், கழுதைகள், பன்றிகள், மான்கள், குதிரை, ஆடு, காட்டுப்பன்றி என்பன சுதந்திரமாகத் திரிகின்றன

### புள்ளிமான் குட்டி

அங்குள்ள சிறியபுள்ளி மான் ஒன்று எடுத்த எடுப்பிலேயே பல சிறுவர்களை தன்வசம் ஈர்த்து சிநேகிதம் கொண்டுவிடுகின்றது

புள்ளிப்புள்ளி மானே;
துள்ளித்துள்ளி ஓடிவா!!
அள்ளி இந்தப் புள்ளியை
யார் உனக்குத் தந்தது?

அந்த மான் குட்டியை அரவணைத்தபடி தமது! 'பாலர் வகுப்பு' பாடலை படித்து மகிழும் சிறுவர் அனேகர்!


### ஓ!முதலை

அதே பகுதிக்குள்- இதுவரை கற்பனையில் [illegible]

(8ஆம் பக்கம் பார்க்க)

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 30



அனுப்புவோர் பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

ஒப்பம்: ..............................

### போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்.

**மேலிருந்து கீழ்**

1. காரியங்களைச் சாதிப்பதற்கு இதுவும் வேண்டும்
2. வானரம்
3. இயல்பு
4. அபிநயம்
5. பாணம்
7. செல்வம்
9. முக்கியமான தானிய உணவு
11. தந்தை
12. ஆட்சி அமைக்கப் போட்டி போடுவது
14. ஒரு நட்சத்திரம்
15. வலி
16. மந்தை
17. இந்தக் கதிரையைப் பிடிக்கப் போட்டிகள் அதிகம்
19. அன்பு
21. அழகுமிக்கவள்
25. நயனம்

**இடமிருந்து வலம்**

1. சேலையின் முன் தலைப்பு
4. பகுதி
6. அழகு
7. கால எல்லை
8. விளையாடும் இடம்
10. புருவிற்காகத் தன்னையே ஈந்தவன்
12. யானை
13. காலம் தாழ்த்து
16. பறவை
18. இப்போது யாழ்ப்பாணப் பாடசாலைகள் பலவற்றில் நடந்துவரும்நிகழ்ச்சி
20. வகுப்பு
22. தோல்
24. ஊழ்
25. பழமை
26. இசைப்பாட்டு

### சொற்சிலம்பம் இல. 28 விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. சத்தியசோதனை 2. திசாபலன் 3. மனை 4. கா 5 வீர 7. திட்டம் 8. சிம்மம் 9. சுயம்வரம் 11. சகடம் 13. மடை 16. மாதவி 17. வேள் 18. கடா

**இடமிருந்து வலம்**

1. சந்திரமதி 6. திரௌபதி 8 சிரசு 10. வட்சம் 12. சோமன் 14. கமலம் 15 தடை 16. மாடம் 17. வேதம் 18. கர 19. வேள்வி 20. படாம்

### சொற்சிலம்பம் இல. 28 வெற்றி பெற்றவர்கள் விவரம்

முதலாம் பரிசு:- ஆ. முத்துத்தம்பி, 95, நாயன்மார் வீதி, நாயன்மார்கட்டு, நல்லூர், யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு:- சுவர்ணஜோதி லேமன், ''பீஸ்லின்'' உடுவில் வீதி, மானிப்பாய்.

மூன்றும் பரிசு:- பொ சுந்தரலிங்கம் 86, இராசேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

★ பரிசுக்குரிய பணத்தைப் பெறுவதற்கு, கடிதம் கிடைத்த பின்னர் பரிசு பெற்றவரே உரிய அடையாள அத்தாட்சிகளுடன் நேரில் வர வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லூரில் சகாய விற்பனை**

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பர விற்பனைக் காட்சிச் சாலையில் ரூ 15/க்கு எமது தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும், மில்க்வைற் செய்தியும் அறிவு நூல்களும், கீரை விதைப் பைக்கற்றும் அன்பளிப்பாகக் கொடுக்கப்படும். மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற் — யாழ்ப்பாணம்



# சஞ்சீவி

23 - 08 - 1986 சனிக்கிழமை



**பொன்னாலையில் சகாய விற்பனை**

28-8-86ல் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமான் தேர்த் திருவிழாவில் மில்க்வைற் விளம்பர விற்பனை வாகனத்தில் ரூ 15/-க்கு எமது தயாரிப்புகளை வாங்குபவர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும், மில்க்வைற் செய்தியும், அறிவு நூல்களும், கீரை விதைப் பைக்கற்றும் அன்பளிப்பாகக் கொடுக்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் — யாழ்ப்பாணம்


# இன ஒதுக்கல் பிரச்சினை முக்கிய இடம் பெறவிருக்கும்

## எட்டாவது அணிசேரா மாநாடு

அணிசேரா இயக்கத்தின் எட்டாவது மாநாடு இம்மாதம் 26ஆம் திகதி சிம்பாப்வேயின் தலைநகரான ஹராரேயில் ஆரம்பமாகிறது. அதனையொட்டி இந்தக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

சர்வதேச அரங்கிலே தனது கால்நூற்றாண்டு வரலாற்றிலே ஒரு புதிய, ஆரோக்கியமான மிகவும் தாக்கமான சாப்தத்தைப் படைத்த பெருமை அணிசேரா இயக்கத்தைச் சாரும்.

ஏகாதிபத்தியம், காலனித்துவம் ஆகியவற்றின் அகர பிடியிலிருந்து விடுதலை பெறும் போராட்டப் பகைப்புலத்தில் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமைப் பின்னணியில் மலர்ந்தது அணிசேரா இயக்கம்.

25 உறுப்பினர்களுடன் 1961ஆம் ஆண்டு உதயமான அணிசேரா இயக்கத்தில் இன்று 102 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இவற்றைவிட பலஸ்தீன விடுதலை இயக்கமும், தென்மேற்கு ஆபிரிக்க நமீபியா மக்கள் இயக்கமும் (Swapo) பார்வையாளர் அந்தஸ்தைப் பெற்றுள்ளன.

அணிசேரா இயக்க நாடுகளின் தலைவர்களினது முதலாவது உச்சி மாநாடு யூகோஸ்லாவியாவில் 1961 செப்டம்பரில் நடைபெற்ற போது ஜனாதிபதி டிட்டோ தலைவரானார். அம்மாநாட்டில் சமாதான சகவாழ்வு, மக்களின் சுயநிர்ணய உரிமை சுதந்திர உரிமை ஆகியவை வலியுறுத்தப்பட்டன.

இரண்டாவது உச்சி மாநாடு எகிப்தில் 1964ஆம் ஆண்டு நடைபெற்றது. ஜனாதிபதி நாஸர் தலைவரானார். அம்மாநாட்டில் ஏகாதிபத்தியம், காலனித்துவம், நவ காலனித்துவம் ஆகியவை உலக நாடுகளின் மோதல்களையும் பதற்றநிலையையும் ஏற்படுத்துவது கண்டிக்கப்பட்டது.

அத்துடன் பிறிதொரு முக்கிய தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டது. "இன ஒதுக்கல் கொள்கை காரணமாகத் தென்னாபிரிக்காவை உலக நாடுகள் முற்றாகப் பகிஷ்கரிக்க வேண்டும். ராஜரீக உறவுகளைத் துண்டித்துக் கொள்ள வேண்டும். அதன் உற்பத்திப் பொருள்களை இறக்குமதி செய்யலாகாது" —இவ்வாறும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

### சமாதானப் பிராந்தியம்

1970இல் சாம்பியாவில் நடைபெற்ற 3வது மாநாட்டுக்கு ஜனாதிபதி கெனத் கௌண்டா தலைமை வகித்தார். இந்து சமுத்திரம் சமாதான பிராந்தியமாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டது.

1973இல் நடைபெற்ற நான்காவது உச்சி மாநாடு அல்ஜீரியாவில் பூமெடியன் தலைமையில் நடைபெற்றபோது 17 அங்கத்துவ நாடுகளைப் பிரதிநிதிகளாகக் கொண்ட ஒருங்கிணைப்புப் பிரிவு (Co-ordinating Bureau) அமைக்கப்பட்டது.

1976இல் இலங்கையில் ஐந்தாம் மாநாடு நடைபெற்றபோது பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வியக்கத்தின் முதல் பெண் தலைவரானார். டியேகோ கார்சியா போன்ற பிற நாட்டு படைத்தளங்கள் அமைக்கப்படுவது இம்மாநாட்டில் கண்டிக்கப்பட்டது.

1979இல் கியூபாவில் காஸ்ட்ரோ தலைமையில் ஆறுவது மாநாடு நடைபெற்றபோது மூன்றாவது உலக நாடுகளின் அபிவிருத்தி, பொருளாதார உடன்பாடுகள் ஆகியவை ஆராயப்பட்டன.

### பொருளாதார ஒத்துழைப்பு

1983இல் ஏழாவது உச்சிமாநாடு இந்தியாவில் அன்னை இந்திரா காந்தி தலைமையில் நடைபெற்றபோது அணிசேரா நாடுகள் சுயதேவைப் பூர்த்தியை நோக்கி அணிநடைபோடுவதற்கு 23 துறைகளில் பொருளாதார ஒத்துழைப்புக்குத் திட்டமிடப்பட்டது. அத்துடன் வல்லரசுகளின் அணு ஆயுதப் போட்டியைத் தவிர்க்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இப்போது எட்டாவது உச்சிமாநாடு இம்மாதம் 26ஆம் திகதி சிம்பாப்வே நாட்டின் தலைநகரான ஹராரேயில் நடைபெறுகிறது. இந்த நாட்டின் பிரதமர் றொபேர்ட் முகாபே இதன் தலைவராகிறார்.

### முக்கியமானதொரு அரசியல் நிகழ்வு

இனஒதுக்கல் கொள்கைக்கு எதிரான உணர்வு உலக அரங்கில் உக்கிரம் அடைந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் தென்னாபிரிக்காவின் அருகில் அமைந்துள்ள சிம்பாப்வேயில் இம்மாநாடு நடைபெறுவது ஒரு முக்கிய அரசியல் நிகழ்வாகும்.

இம்மாநாட்டில், போர் — சமாதானம், பொருளாதார அபிவிருத்தி, தென்னாபிரிக்க இனஒதுக்கல் கொள்கை ஆகியன ஆராயப்படவுள்ளன.

ஐ. நா. சபை அமர்வுகளிலும் பார்க்க, ஆசிய நாடுகளும் குறிப்பாக விடுதலை பெற்று வரும் ஆபிரிக்க நாடுகளும் அங்கம் வகிப்பதுடன் விடுதலைப்போராளிகள் குழுக்கள் பார்வையாளர் அந்தஸ்து பெற்றுள்ள அணிசேரா இயக்க மாநாட்டுத் தீர்மானங்களும் செயற்பாடுகளும் இன்று பாரிய தாக்கத்தைச் சர்வதேச அரங்கிலே ஏற்படுத்துவதைக் காண்கிறோம். இந்த வகையில் இவ்வுச்சி மாநாடு முக்கியத்துவம் வாய்ந்தது.

**வே. வரதசுந்தரம்**

## வடக்கில் வளர்ந்துவரும்---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் பல சிறுவர்கள் கண்டுவந்த - அல்லது குரங்கும் முதலையும் கதையில் மட்டும் படித்திருந்த - முதலைக்குட்டியொன்று அமைதியாக உறங்குகின்றது.

அங்கு - நாரைகளுமுண்டு - கீரிகளுமுண்டு; பாம்பு ஒன்றுகூட கூண்டிற்குள் இருந்தது. ஆனால் பார்க்கச்சென்றவர்கள் கூண்டின் கம்பியைச் சற்று விலக்கிவிடவே அது எங்கேயோ ஓடிப்போயிற்று.

### கடல வலயம்

கடல்வலயச் சட்டத்தால் மீனினத்தையே மறந்திருந்த பெரியவர்களுக்கு நினைவூட்டலும், சிறியவர்களுக்குத் தம்மை இனங்காட்டவும் இருப்பவைபோல அழகான வளர்ப்பு மீன்கள்...

இவை அனைத்துமே எமக்குத் தேவையானவற்றை நாமே பூர்த்தி செய்வோம் என்பதை நன்கு நிலையுறுத்துகின்றன.

### எண்ணம் வந்தது எப்படி?

பண்டிதர் சரணாலய நிர்வாகிகளுள் ஒருவரான ரவியிடம் இந்த எண்ணம் எப்படி வந்தது எனக் கேட்டேன்.

எமது மழலைகளின் மனநிலை பாதிப்படையாமல் பேணுவதன் ஓர் அம்சமான இந்தச் சரணாலயம்.

பண்டிதர் என்ற பெயர் ஏன் அமைந்தது?

சகலதையும் அறிந்தவர் பண்டிதர். அதே போல சகலரும் அறிந்தவரும் பண்டிதரே! அதனால் இப்பெயரை வைத்தோம்.

அவரிடம் நிறையவே கதைக்கலாம் போலிருந்தது! ஆனால் அவரிடம் பேசிய குறுகிய நேரத்தில் நான் பெற்ற தகவல்கள் இவை—

### வரலாறு

முள்ளும் புதரும் மண்டியிட்டுக் கிடந்த இந்த நிலத்தில் முதலில் நூல் நிலையம் ஒன்றை ஆரம்பித்தோம். பின்னர் பாலர் பாடசாலையாக அது வளர்ந்தது.

தொடர்ந்து மூலிகைப் பண்ணை ஒன்றைச் சிறிது சிறிதாக உருவாக்கினோம். இன்று இப்பண்ணையில் கிடைத்தற்கரிய 65 வகையான மூலிகைகள் உண்டு. மூலிகைப் பண்ணையைத் தொடர்ந்து சிறுவர் பூங்காவாக எமது நிலையம் வளர்ச்சி பெற்றது. அந்த வளர்ச்சியின் மேலும் ஒரு படிதான் இந்தச் சரணாலயம் ஆகும்.

### 2000 மக்கள்

தினந்தோறும் சராசரி 2000 மக்கள் இங்கு வருகின்றார்கள். நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு காலை 9 மணிக்கு இந்தச் சரணாலயத்தை ஆரம்பிக்கின்றோம். இரவு 10 மணிவரை இது திறந்திருக்கும். உற்சவங்கள் பூர்த்தியாகியதும் மாலை 3-00க்குத் திறந்து இரவு 9-00 மணிவரை பார்வையாளர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவோம்.

### தண்ணீர் பம்ப்

இங்குள்ள கையால் இயக்கும் தண்ணீர் பம்ப் மக்கள் மத்தியில் பிரபலமடையத் தொடங்கியுள்ளது. 800 ரூபா செலவுடன் 35 அடி ஆழமான கிணற்றிலிருந்து தண்ணீரை மணித்தியாலம் 800 கலன் விதம் வெளிக்கொண்டு வர முடியும். வீட்டுப் பாவனைக்கும் பயிர்ச்செய்கைக்கும் மிகவும் உகந்தது. மின்தட்டுப்பாடோ மண்ணெண்ணெய் தட்டுப்பாடோ இதனை ஒன்றும் செய்யாது. விரைவில் காலால் இயக்கக்கூடிய அதிசக்தி வாய்ந்த இயந்திரங்களையும் உற்பத்தி செய்வோம். அனாதைகளாகும் மிருகங்களுக்கும் இங்கு இடமளித்து அந்த ஜீவன்களையும் காருண்யமாக வளர்க்கும் திட்டமும் எம்மிடம் உண்டு.

இவர்களது சகல முயற்சிகளும் சிறக்க மனதாரப் பாராட்டிக் கொண்டே வெளியே வருகிறோம்.

# மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்

## நடக்கும் மூடுமந்திரப் பேச்சு

'மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத' நிலையில் இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

கொழும்பில் பேச்சு, புதுடில்லியில் பேச்சு, நள்ளிரவில் சென்னைக்கு வந்தும் பேச்சு.

இப்படி பலவிதமாகப் பேச்சுக்கள் நடக்கின்றன.

எல்லாம் மூடுமந்திரப் பேச்சுக்களாக உள்ளன.

பேசிப்பேசியே காலம் கழித்து வந்த நமவர்களுக்கு இப்பேச்சுக்கள் புதியன அல்ல.

இனப்பிரச்சினை இறுதிக் கட்டத்துக்கு வந்துள்ளதாகக் கருதப்பட்டுத்தான் பேச்சுக்கள் குறித்து கவனஞ் செலுத்தப்படுகிறது.

கொழும்பில் நடைபெறும் இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் ஐந்து தினங்கள் நடைபெற்றன. இன்னும் தொடர உள்ளன.

இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் தொடர முன்னரே 'உடன்பாடு காணும் நேரம் வந்துவிட்டது'—என்று அரசு தரப்பில் 'ஆனந்த'மாகக் கூறப்பட்டது. அவ்வளவு அவசரம் பார்த்தீர்களா?

ஏதோ பேனாவும் கடதாசியும் தயார், கூட்டணித் தலைவர்கள் கொழும்பு வந்தவுடன் உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டியதுதான் பாக்கி என்ற தோரணையில் அப்பேச்சு அமைந்திருந்தது.

இதனிடையில் கொழும்பு வந்த கூட்டணித் தலைவர்கள் "ஒரு விஷயத்திலும் இறுதித் தீர்வு காணப்படவில்லை. என்ன உடன்பாடு?"—என்று கேட்டனர்.

இச்சூழ்நிலையில் இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

நேற்று முன்தினம் வியாழன் நடைபெற்ற பேச்சுக்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்பட்டன.

தமிழரின் அபிலாஷைகளுக்கு ஏற்ற திருத்தங்களை அரசு தரப்பினர் அப்பேச்சுக்களின்போது அறிவிப்பர் என்று கூட்டணியினர் எதிர்பார்த்தனர்.

'இலவு காத்த கிளியான' நிலைக்கு கூட்டணியினர் தள்ளப்பட்டுள்ளனர். அரசின் இறுதிநிலையைத் தெரிந்து கொள்ளாது சென்னை திரும்புவது இல்லை என்று கூட்டணித் தலைவர்கள் உறுதி எடுத்துள்ளனர்.

இனி நடக்கும் பேச்சுக்கள் அரசின் இறுதி நிலையைத் தெரிந்து கொள்ளும் பேச்சுக்களாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி 'தடம் புரளாமல்' இருக்க 27 அமைப்புக்களின் தலைவியான சிறிமாவோ செயல்படுகின்றார்.

கூட்டணி 'தடம் புரளாமல்' இருக்க ஐந்து விடுதலை அமைப்புக்களும் ஒன்று சேர்ந்துள்ளன.

அதுவும் இந்திய உயர் அரசு அதிகாரிகளைச் சந்தித்த பின்னர் ஒன்று சேர்ந்துள்ளன.

போராளிகளைப் புதுடில்லியில் வைத்துச் சந்திக்க இயலாமல் போன வெளியுறவு அமைச்சர் சிவ்சங்கர் முதலியோர் நள்ளிரவுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு சென்னை வந்து அவர்களை எம் ஜி ஆருடன் சந்தித்தனர்; பேச்சுக்களையும் நடத்தினர்.

அதன் விளைவு......

இந்திய இராஜதந்திரம் உச்சக்கட்டத்துக்கு வந்து விட்டதோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

கொழும்புப் பேச்சுகளில் கூட்டணித் தலைவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு இணங்க மறுக்கும் நிலையில் உள்ள இலங்கை அரசின் மீது இராஜதந்திர நிர்ப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தும் தந்திரம் தானோ போராளிக்குழுக்கள் ஐந்தும் கருத்து உடன்பாடு கண்டமை?

இப்படியும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

கொழும்புப் பேச்சுக்கள் பற்றி அரசு தரப்பினரும் ஒன்றும் சொல்வதாக இல்லை. கூட்டணித் தலைவர்களும் விவரங்கள் தெரிவிப்பதாக இல்லை.

இரு தரப்பினருக்குமே 'மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்' நடக்கும் இப்பேச்சுக்கள் எப்படி அமையப் போகின்றனவோ?

**உள்ளதும் புறமும்**

**(குறுமுனி)**

# ராணுவ ஷெல் விழுந்து.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவர். யாழ் அரஸ் ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தின் பங்காளர்.

### நேற்று திருமணம்

தான் காதலித்துவந்த சிகசுப்பிரமணியம் சகுந்தலாதேவி என்னும் பெண்ணை இரு கடந்த புதன்கிழமை பதிவுத்திருமணம் செய்து கொண்டார்.

இரண்டுநாள் கழித்து நேற்று வெள்ளிக்கிழமை காலை 8-30மணியளவில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் சம்பிரதாய பூர்வமாகத் திருமணம் நடைபெற்றது.

திருமணம் முடிந்த பின்னர் காலை 9-30 மணியளவில் யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடியில் உள்ள தமது வீட்டுக்கு புதுமணத் தம்பதிகள் அழைத்துவரப்பட்டனர்.

### 'வீட்டில் ஷெல்'

அங்கு வந்து சேர்ந்த ஒரு சில நிமிட நேரத்தில் கோட்டை முகாமிலிருந்து ஏவப்பட்ட 'ஷெல்' குண்டு ஒன்று திருமண வீட்டின் கூரையைப் பிய்த்துக்கொண்டு வீட்டின் மண்டபத்தில் வீழ்ந்தது.

அந்தச் சமயம் அங்கிருந்த கதிரை ஒன்றில் மாப்பிள்ளை அமர்ந்திருந்து உறவினர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தார்.

வீட்டில் விழுந்தமுதல் ஷெல் குண்டுக்கு அவர் இலக்கானார். வயிறு பிளந்தநிலையில் முகத்தில் காயங்களுடன் அவர் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமானார்.

அருகிலிருந்தவர்கள் அவருக்கு முதலுதவி செய்ய ஓடிச் சென்றார்கள்.

அந்தவேளையில் அடுத்து வந்தது மற்றொரு ஷெல் குண்டு.

மாப்பிள்ளைக்கு உதவி புரியச் சென்ற அவரது உறவினர் ஒருவர் அந்தக் குண்டுக்கு இலக்காகி மரணமானார்.

வே. இராசதுரை (38 வயது) என்பவரே மரணமானவர். இவர் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற பின்னர் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்து வந்தார்.

ஷெல் குண்டு விழுந்த சமயம் மாப்பிள்ளைக்கு அருகில் மணமகள் இருக்கவில்லை. அதனால் மணப்பெண் மயிரிழையில் உயிர் தப்பினார். (உ10)

### ராகிங்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டிக்கவும், தண்டிக்கவும் வேண்டிய ஒரு விடயம்' என்று அவர் மேலும் கூறினார்.

நிர்வாகி

மாணவர்களின் போராட்டம் பற்றியும், அவர்கள் முன் வைத்த கோரிக்கைகள் பற்றியும் யாழ் பல்கலைக்கழக நிர்வாக உயர் அதிகாரி ஒருவரிடம் கருத்து கேட்டபோது:

வெளியார் தலையீடு உட்பட மாணவர்கள் முன் வைத்த 7 கோரிக்கைகளும் ஏற்கனவே நிர்வாக சட்ட திட்டங்களில் உள்ளவை.

மாணவர்களாலேயே இச்சட்ட திட்டங்கள் மீறப்பட்டு வெளியார் தலையீடு உட்கொண்டு வரப்பட்டது.

மீண்டும் மாணவர்களே சட்டதிட்டங்களை நிலைநிறுத்த முன்வந்ததையிட்டு நாம் சந்தோஷப்படுகின்றோம்.

### கருத்துக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அபிமானிகள் தமிழ்ச் சங்கங்கள் உதவ வேண்டும்.

பெரியவர்களிடம் தமிழ் அபிமானத்தை வளர்க்கவும், இளைஞர்கள் குழந்தைகளுக்குத் தமிழ் போதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இல்லையேல் உலகில் தமிழ் பேசும் தமிழர் எண்ணிக்கை குறைந்துவிடும்!


# ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு ஒரு இனிமையான செய்தி!

## 'மைக்ரோ கொம்யூனிகேசன்'

குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

## ரெலிபோன் - ரெலக்ஸ் சேவைகள்!

உள்நாட்டிலும்—வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அலைவரிசைகளில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்

மைக்றோ கொம்யூனிக்கேசன் ஸ்தாபனத்தார்.

ரெலிபோன் - ரெலெக்ஸ் சேவையில் பல வருடகால அனுபவம் பெற்றவர்களின் தொழில்நுட்ப கண்காணிப்பின்கீழ் தங்கள் உன்னத சேவையை வழங்குகின்றார்கள்!

## 'மைக்றோ கொம்யூனிக்கேசன்'

கே. கே. எஸ். வீதி, குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.

**உங்கள் தேவையே எங்கள் சேவை!**

உங்கள் தேவைகளை திறம்படச் செய்து தருவதற்கு எங்கள் ஸ்தாபனத்தின் இதயக் கதவுகள் இரவு — பகல் இடையறாது திறந்திருக்கும்.

வருக! வருக!! வருக!!!


## ஓர் அன்பின் வேண்டுகோள்

பேரன்புடைய தமிழ் மக்களே!

புதுவாழ்வு நிலையத்தாரகிய நாங்கள் ஆனைக்கோட்டையில் வயோதிபர்களுக்காக ஒரு இல்லத்தைக் கட்ட முயன்று கொண்டிருக்கின்றோம். இந்த அன்புப் பணியில் பொது மக்களாகிய நீங்களும் பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம். அதற்கான பெருந்தொகையை பொதுமக்களாகிய உங்கள் ஒவ்வொரு வீட்டிலுமிருந்து எதிர்பார்க்கின்றோம். உங்கள் நன்கொடைகளை — காணிக்கைகளை அனுப்ப வேண்டிய முகவரி.

போதகர் லி. ஜே. ஜீவரத்தினம்
புதுவாழ்வு நிலையம், ஆனைக்கோட்டை


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலையவீதி, இரண்டாம் ஒழுங்கை 5ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. 23—08—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 5, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org